REGD. M. 4642,

# திராவிடநாடு

மலர் 6 | 28-9-47 | இதழ் 18

## அறமாமோ

[ வா. செ. குலோத்துங்கன் ]
சேலம் கல்லூரி

உழைப்பவர்தம் உடல்முழுதும் சேறு! வீட்டில்
உறங்கிடுவோர் மெய்முழுதும் நறும்பன் னீரிற்
குழைத்தெடுத்த சந்தனமேன்றிருக்கும் இந்தக்
கொடுமையினை யினியுலகம் பொறுப்ப துண்டோ?
மழைத்துளியை யிழந்தபயிர் வாடும்! தேனை
மறந்துவிட்ட வண்டினங்கள் மாளும்! நாளும்
உழைப்பவர்பால் ஆட்சியிலா எந்த நாடும்
உருக்குலையும்! புரட்சியங்கு உதித்தே தீரும்!

கண்ணில்லான் கவின்பொலியும் பொருள்கள் தம்மைக்
காணுகிற பேறிழப்பான்! செவியில்லாதான்
பண்ணமைந்த நல்லிசை, இன்மழலை, காதற்
பாவையர்தம் கனிமொழிகேள் வாய்ப்பிழப்பான்
பெண்ணைவெறுத் தடவிசெலும் ஏழை வாழ்வு
பெற்றபெரும் பயனிழப்பான். என்றால், நாமும்
ஆண்மையிலான் அரசிழப்பான் போன்றிருத்தல்
அறமாமோ! மறம் பெற்றமைப்பீர் மக்களரசே!

13-ம் பக்கத் தொடர்ச்சி

இராமசாமியான பிறகு, இன்றுநேரமில்லை, நாளை வரச்சொல், என்று பேசுவது, வரதராஜனின்செவியிலே வீழ்ந்ததென்றால், மனவேதனையும் சலிப்பும்வரத்தானேசெய்யும், இந்த சலிப்பின் பிடியிலிருந்தும் சிற்சில சமயங்களிலே விடுபட்டு, சென்னையில் சில பல சமயங்களில், நமது இயக்கக்கூட்டங்களிலே கலந்து கொள்ளவும் செய்தார்-ஆனால் அது அந்தப்பழைய வரதராஜன் அல்ல, என்பது அவருடன் அந்த நாட்களிலே பழகிய என்போன்றவர்களுக்கு நன்கு தெரியும். கடைசி வரையில் அவர், எதையோ தொலைத்துவிட்டுத் தேடித் தேடி அலுத்தவர் போன்றே இருந்து வந்தார்.

சொந்த வாழ்க்கை அவருக்கு மிக மிகச் சுவையற்றதாக இருந்தது.

“மணி என்ன சார் இப்போது? மூன்று ஆகப்போகுது சார்! அந்த மடைப்பயல்இன்னும்வரவில்லை சார்! சோறு இல்லாமல் என்னசார் செய்வது!” என்று கூவுவார்.

பிறகு சோறு வரும் தட்டுகளிலே உள்ளபண்டத்தை,வெறித்தபடி பார்ப்பார்-ஒருபெருங் கூச்சலிடுவார், சோறு கொண்டுவந்த அவர் தம்பி, பயந்து போகும்படி,

“நாய் தின்னுமா சார், இந்தச் சோறு-நாய் தின்னுமா? பணம் மட்டும் பிடுங்கிக்கொள்கிறார்கள் சார்! டே! உன்னைக்கொன்று போட்டுவிட்டுத்தான், பிறகு சோறுகூடத் தின்பேன்” என்று கூச்சலிட்டுக் கொண்டே (டாக்டர் ஜான்சன் போல) சாப்பிடுவார் — சாப்பிடச் சொல்வார்-சாயா என்று கூவுவார்-அதையும் பருகுவார் - வியர்வை பொழியும்-அதைத்துடைக்க, மேல் துண்டு இராது-கிடைக்கும் துண்டு, கரிக்கறை நிரம்பியதாக இருக்கும்.

இவ்வளவு சுவையற்ற சொந்த வாழ்வுதான் இவருக்கு. சில ஆண்டுகளுக்குமுன்பு சற்றுச் சூழ்நிலையைச் சுகமுள்ளதாக்கிக்கொள்ள முயன்றார். கல்லூரியை அடுத்த சிறிய தோட்ட வீட்டில் குடி இருந்து கொண்டு வந்தார்.

“சார்! ஒரு பத்து இருபதாயிரம் ரூபாய் சேரட்டும் என்னிடம், பிறகு இந்த வேலையை உதறித்தள்ளிவிட்டு, என்ன செய்கிறேன் பாருங்கள்” என்று கூவுவார். அவருக்கு அந்த எண்ணம் தோன்றியதும் ஏற்படும் கோபம், பிறகு, புகைந்தே போகும். இறக்கும் தருவாயில், தம்மிடமிருந்த சிறு தொகையைக் கல்விக்காகவே செலவிடுதல் வேண்டுமென்று கூறியதாக அறிந்து மகிழ்கிறோம். சிறந்த நண்பர் — சிதைந்த வாழ்வு. அவருடைய சீரிய முயற்சியினால், என் போல் பலர், பொது வாழ்வுக்கு வந்தனர். அவருடைய தொண்டு, பார்ப்பனரல்லாதார் இயக்கத்துக்கு மிகமிகப் பயன்பட்டது—அவர் வாழ்வோ, பட்டு விட்டது. நாற்பத்து எட்டாம் வயதில் ஆசிரியர் வரதராஜன், இந்தத்திங்கள் 14-தேதி காலமானார். பலன்பெறாது பாடுபட்டுப் பலருக்கு வாழ்வளித்த வீரன்மறைந்தார். அவர் வளர்த்த பயிர் செழிப்பாகஇருக்கிறது—பலர் அறியவும் மாட்டார்கள் அந்தநாட்களிலே அவர் ஆற்றிய அரியதொண்டினை. அவருடைய பிரிவால், வாடும், என்போன்ற பல நண்பர்கள், மாதக்கணக்கிலே பேசிக்கொண்டே இருக்கலாம், அவருடைய பல்வேறு செயல்களைப் பற்றி. ஆனால்........ அவருடைய குடும்பம்! அவர்களின் வேதனையை என்போல் பலர் பங்கிட்டுக் கொள்வதன் மூலமாக மட்டுமே, குறைத்திட முடியும்.

**C. N. அண்ணாதுரை.**

15-ம் பக்கத் தொடர்ச்சி

எழுத ஏட்டிலடங்காத அவரிடமிருக்கும் பொருள்களையெல்லாம் தராசுத்தட்டில் வைத்தால், எத்தனை அமர்நீதிகள்—எத்துணை அளவு அவர்களின் செல்வக் குவியல்கள் அத்தட்டின் நிறைக்கு இடப்பட வேண்டுமென்பதை நினைக்கும் போது, சிவனாரின் பெருமைக்கு ஓர் எல்லையுமுண்டோ என்று பக்கத்தில் நின்ற வேறொரு சிவ அன்பர் கூறி உவகைக் கடலில் ஆழ்ந்தார்.

சிவனாரின் கோவணம் ஒன்றுக்கே இத்துணைப் பெருமையென்றால், அதிலும் சிவனாரிடமுள்ள பொருள்களுள் நிறையில் மிகவும் குறைந்ததான கோவணத்தின் நிறைக்கே இவ்வளவுபொருள்கள்தேவைப்பட்டதென்றால், அவருடைய ஏனைப் பொருள்கள் எல்லாவற்றின்நிறைக்கு இவ்வுலகிலுள்ள பொருள்கள் முழுவதுமே போதாதென்பது ஒருபுறமிருக்க, நம்முடைய சிவனாரே ஒரு வேளை அந்தத் தராசில் ஏறநேர்ந்தால் நிலைமை என்ன ஆகும்! என்று இன்னொரு சிவஅன்பர் கூறி, மகிழ்ச்சிப் பெருக்கால் மயங்கி வீழ்ந்தார்.

கிருஷ்ண துலாபாரம், அவருடைய மனைவிமாரான பாமா, உருக்குமணி ஆகிய இருவருக்கும் இடையே உண்டான குடும்பச் சண்டையால் ஏற்பட்ட சுயநலமாகும். ஆனால், நம்முடைய சிவனாருடைய கோவண துலாபாரம், அடியவர்களின் அன்புப் பெருக்கைச் சோதிப்பதற்காக ஏற்பட்ட பொது நலமாகும் என்று பிறிதொரு சிவ அன்பர் கூறிக், கிருஷ்ணனுக்கும் சிவனுக்குமுள்ள உயர்வு தாழ்வுகளை எடுத்து விளக்கிப் புளகாங்கிதம் அடைந்தார். இவர்களின் உரையாடல்களைக் கேட்டுக்கொண்டு பக்கத்தில் நின்ற ஒரு பகுத்தறிவாளன், அவர்களை நோக்கி, “உங்கள் சிவன் எடைபோட்டு அளந்தறியப்படும் அளவில் உள்ளவர் தானோ?” என்று கேட்டார். திரும்பிப்பார்த்தேன், சிவஅன்பர்கள் காணப்படவில்லை; பகுத்தறிவாளன் மட்டும் நின்றார்.

—

## தமிழ்த் திருமணம்

11—9—47 குளித்தலை K. செல்லப்பாவுக்கும் — கோகிலாம்பாளுக்கும் வையாபுரி சோழகர் இல்லத்தில் காலை 8½ மணிக்கு திரு S. குருசாமி அவர்கள் தலைமையில் சிதம்பரம் திரு. தண்டபாணி அவர்கள் தமிழ் முறைப்படி திருமணத்தைச் சிறப்பாக நடத்திவைத்தார்.

## “சுதந்திர நாடு”

சென்னை மாகாணத் தமிழ் முஸ்லிம்களால் நிர்மாணிக்கபட்ட நூறி பிரஸ் லிமிடெட் கம்பெனியின் சார்பாக மேற்படி “சுதந்திர நாடு” என்றபத்திரிகை 1947 ஆண்டு அக்டோபர் மாதத்தில் வெளிவரும்.

ஆசிரியர் :—

M. R. M. அப்துர்றஹீம் B. A.,

நூறி பிரஸ் லிமிடெட் கம்பெனியின் சார்பாக ‘தமிழ் டான்’ என்ற தினசரி வெளியிடப்படும் என்று “ஸைபுல் இஸ்லாத்” தில் சென்ற சில மாதங்களாக விளம்பரஞ் செய்யப்பட்டு வந்ததையே ! இப்பொழுது “சுதந்திர நாடு” என்று மாற்றியிருப்பதை அனைவருக்கும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

விலை 2 அணா

# திராவிடநாடு

ஆண்டுசந்தா ரூ 7

# கோவண துலாபாரம்

[நக்கீரன்]

சோழநாட்டிலே பழையாறை என்னும் ஊரிலே அமர்நீதி என்றொரு அடியவர் இருந்தார். அவரிடம் செல்வம் நிறைய இருந்தது. அச்செல்வத்தை, அடியவர்களுக்கு அன்னம்—ஆடை முதலியன அளிப்பதில் செலவு செய்து வந்தார். அடியவர் செய்யும் அறத்தின் திறத்தை அறிந்த அம்பிகை பாகன், அவருடைய அன்பைச்சோதிக்க எண்ணி, ஒரு பார்ப்பன இளைஞனாக வடிவம் எடுத்துக், கோவணத்தையே ஆடையாகக்கொண்டு, மாற்றுடைக்காக இரண்டு கோவணங்களை ஒரு தண்டிலே கட்டி எடுத்துக்கொண்டு கைலையை விட்டுப் புறப்பட்டு அமர்நீதியின் இல்லத்தை அடைந்தார். அமர்நீதி அவருக்கு அன்னமிட எண்ணி, அவரை நோக்கி 'இங்கே அந்தணர்கள் அமுது செய்ய அந்தணர்களால் சமைக்கப்பெற்ற அமுதும் உண்டு' என்றார். அதற்குப் பார்ப்பன இளைஞன், "நாம் காவேரியில் நீராடி வருவோம்; ஒருவேளை மழைவரினும் வரும். இவ்வுலர்ந்த கோவணத்தை வைத்திருந்து கொடும்" என்று தண்டிலுள்ள ஒரு கோவணத்தை அவிழ்த்துக் கொடுத்துச்சென்றார். சென்றவர் தம்முடைய அருளால் கோவணத்தை மறையும்படி செய்ததோடு, மழையையும் வருவித்து, அதில் நனைந்தபடிவந்து, தாம் முன்னர் கொடுத்திருந்த உலர்ந்த கோவணத்தைத் தரும்படி அமர்நீதியாரிடம் கேட்டார். அவர், கோவணம், வைக்கப்பட்ட இடத்தில் காணப்படாமை கண்டு, கலங்கி, வேறோர் கோவணத்தை எடுத்துக் கொண்டுவந்து, "தங்களால் கொடுக்கப்பட்ட கோவணம் தவறிவிட்டது; இது, தாங்கள் கொடுத்த கோவணம் போன்று கிழிக்கப்பட்டதன்று; அதற்கென்றே நெய்யப்பட்டது; இதனை ஏற்றுக்கொள்ளும்; என் பிழையைப் பொறுத்தருளும்" என்று வேண்டிக்கொண்டார். "நன்று! நன்று! நின் செயல்; என்னுடைய கோவணத்தைக் கவர்ந்து கொள்வதற்குத்தானே, நீ அடியவர்களுக்கு அன்னமும் ஆடையும் அளிப்பதாக விளம்பரம் செய்து கொண்டிருப்பது?" என்று வெகுண்டெழுந்தார். அடியவர் அச்சம் அடைந்து, "அடியேன் செய்த தவறுதலுக்கு இனி நான்என்ன செய்தல்வேண்டு"மென்று கேட்டார். "என்னுடைய கோவணத்துக்கு ஒத்த நிறையுள்ள கோவணம் ஒன்று கொடுத்தால் போதும்" என்றார். உடனே, ஒரு தராசு கொண்டுவரப்பட்டு, அதிலே இரண்டு கோவணங்களும் இடப்பட்டன. நிறை ஒத்துவரவில்லை. அமர்நீதி தம்மிடமுள்ள கோவணங்களையெல்லாம் தராசுத் தட்டில் வைத்தார். அப்பொழுதும் நிறை ஒத்துவரவில்லை; அமர்நீதியின் தட்டு உயர்ந்தே நின்றது. அவர், தம்மிடமுள்ள ஆடைகள் அனைத்தையும் பொதி பொதியாகத் தட்டில் இட்டார்; தட்டு ஒத்து வரவில்லை. தம்மிடமுள்ள பொன் வெள்ளி முதலிய உலோகங்களையும் பிற தம்மிடமுள்ள பொருள்கள் எல்லாவற்றையுமே அந்தத்தட்டில்இட்டார்; தட்டு நேர்நிற்கவில்லை. கடைசியாக அமர்நீதியாரும், அவரது மனைவியாரும், புதல்வனும் தட்டில் ஏறி நின்றனர். உடனே தட்டுகள் இரண்டும் நிறையில் ஒத்து நின்றன. பின்னர், அந்தத் தராசே வானவூர்தியாக மாறி, விண்ணை நோக்கி, மேலே சென்று கைலையை அடைந்தது என்ற ஒரு நிகழ்ச்சியும் பெரிய புராணத்தில் காணப்படுகின்றது.

இந்நிகழ்ச்சியில் பேசப்படும்சிவன் தம்முடைய அன்புக்கு ஆளான அமர்நீதியைச் சோதிக்க வந்தபோது, ஒரு பார்ப்பன இளைஞனாக வந்தார் என்று சொல்லப்படுகிறது. சோதனைக்கு ஆளான அமர்நீதியும் ஒரு பார்ப்பனர்; எனவே, அவரைச் சோதிக்க வந்த சிவனும் ஒரு பார்ப்பனனாகவே வந்தார்; அதில் தவறென்ன என்றுசிலர் எண்ணக்கூடும். ஆனால், அமர்நீதி பார்ப்பன வகுப்பைச் சேர்ந்தவரன்று; அவர் ஒரு வணிகர் (செட்டியார்) என்று சேக்கிழார் கூறியுள்ளார். எனவே, அமர்நீதிச் செட்டியாரின் அன்பைச் சோதிக்க எண்ணிய சிவன், தம்மை ஒரு பார்ப்பன வடிவமாக்கிக் கொண்டு வருகிறார். சிவனார் ஏன் பார்ப்பனவடிவத்தில் வந்தார்?—வரவேண்டுமென்று ஏன் விரும்பினார்? ஒருவேளை,—சிவனாருடைய வடிவமே பார்ப்பன வடிவம்; எனவே, அவருக்கு இயல்பாக உள்ள பார்ப்பன வடிவத்திலேயே அமர்நீதியிடம் வந்தார் என்று பொருள் கொள்வதற்கும் இல்லையே!

"மறைக் குலத்தோரு பிரம
சாரியின் வடிவாகி"

என்று சேக்கிழாரே கூறியுள்ளார். அதாவது, பார்ப்பனகுலத்தில், திருமணமாகாத ஒரு இளைஞன் வடிவத்தில் வந்தார் என்பதாகும். எனவே, "வடிவாகி" என்று சேக்கிழார் கூறியுள்ளதை நோக்கும் போது, சிவன், வேறு ஏதோ ஒரு வடிவத்தில் இருந்தார் என்பதும், அமர்நீதியின் அன்பைச் சோதிக்க எண்ணியவுடனே, அந்த வடிவத்தை விட்டுப், பார்ப்பன வடிவத்தை எடுத்தார் என்பதும் நன்கு புலனாகின்றது. என்றால், அவருடைய இயல்பான-எப்போதுமுள்ள—சொந்த (original) வடிவம் தான் யாதாய் இருக்கலாம்? நினைத்த

போது, நினைத்த வடிவத்தை எடுக்கக் கூடியதாக, அவருடைய வடிவம் எந்த முறையில்—எதனைக் கொண்டு அமைந்துள்ளது? என்பன போன்ற ஐயப்பாடுகளுக்கு இடமளிக்கும் வகையிலேயேதான் சிவஇலக்கணம் வகுக்கப்பட்டுள்ளது. சிவனுடைய வடிவத்தை இலிங்கவடிவிலும், மனித வடிவிலும் கோயில்களில் அமைத்துக் காட்டப்பட்டிருக்கிறது. என்ற போதிலும், அவ்வடிவங்களையே சிவனுக்குரிய உண்மையான — நிலைபேறான வடிவங்கள் என்றும் முடிவு கட்டிவிட முடியாது. ஏனென்றால், ஒரு சில சிவஅன்பர்கள், அவரை, ஓர் உருவம் ஒரு நாமம் ஒன்றுமே இல்லாதவர் என்றும், ஆனால் அவருக்கு ஆயிரம் திருநாமங்கள் மட்டும் கட்டாயம் உண்டென்றும்; வேறு சிலர், ஆணாய் - பெண்ணாய்—அலியாய் இருப்பார் என்றும்; இன்னும் சிலர், அவருடைய உடம்பு, பாதி ஆண்வடிவமாகவும், பாதி பெண் வடிவமாகவும் இருக்குமென்றும், இவைபோன்ற இன்னும் பற்பலவடிவங்கள் சிவனுக்குஉண்டென்றும் கூறியுள்ளனரேயன்றி, அவருடையநிலையானவடிவம் 'இதுதான்' என்றுஎவரும் இதுவரை அறுதியிட்டுக்கூறியதில்லை. அவரைப்பற்றிய நிகழ்ச்சிகள் வரும் போதுமட்டும், அவர் இன்ன வடிவத்தை எடுத்து இன்ன காரியத்தைச் செய்தார் என்று கூறுகிறார்கள். ஆனால், சிவனைப்பற்றிய ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியைப் பற்றிப் பேசும்போது, அந்நிகழ்ச்சியில் பொருந்திப் பேசப்படும் சிவன், அதற்கு முன் 'எந்த' வடிவத்தில் இருந்தார்? இப்போது ஏன், 'இந்த' வடிவத்தை எடுத்தார்? முன் இருந்த வடிவத்தில் நின்றே இந்நிகழ்ச்சியையும் செய்தால் என்ன? அமர்நீதியின் அன்பைச் சோதிக்கப் பார்ப்பன இளைஞனாக வடிவம் எடுப்பானேன்? திருநீல கண்டரின் அன்பைச் சோதிக்கப் பார்ப்பனத் துறவியாக வடிவம் எடுப்பானேன்? திருஞான சம்பந்தரிடம் வரும்போது, தோடுடையசெவியனாக, அம்மையப்பனாக வருவானேன்? இன்னும் மற்ற அடியவர்பால் அணுகும்போது வேறு வேறு புதுப்புது வடிவங்கள் தாங்கி வருவானேன்? பொதுவாகவே, தம்முடைய அடியவர்களைச் சோதிக்க வரும்போதெல்லாம் வடிவத்தில் சிற்சில மாறுதல்களோடு வரும் சிவன், தம்மை ஒரு பார்ப்பனன் என்று காட்டிக் கொள்வதில் மட்டும் ஒரு சிறிதும் மறவாது, பார்ப்பனருக்குரிய அடையாளங்களில் யாதாயினும் ஒன்றைத் தாங்கி வருவானேன்? இங்கு பேசப்படும் அமர்நீதியின் அன்பைச் சோதிக்க வந்த சிவன், தம்முடைய கோவணங்களைக் கட்டிக் கொண்டு வந்த தடியில் ஒரு கட்டுத் தருப்பைப் புல்லையும் கட்டி எடுத்துக் கொண்டு வந்தார் என்று சொல்லப்படுகிறதே!

“தண்டின் மீதிரு கோவண
நீற்றுப்பை தருப்பை,
கோண்டு........”

என்று சேக்கிழாரே கூறியுள்ளார். எனவே, அமர்நீதியிடம் வந்த சிவன், தாம்கொண்ட வடிவத்திற்கேற்ப மார்பில் பூணூலும், அந்நூலில் ஒரு அங்குல அளவுள்ள மான் தோலும் கட்டப்பெற்று வந்தார் என்று கூறியதுடன் மட்டும் நின்றுவிடாமல், அவர் தாங்கிவந்த தண்டின்மீது ஒரு கட்டுத் தருப்பைப் புல்லும் கட்டப் பெற்றிருந்ததென்றும் கூறப்படுகிறதே! அமர்நீதியிடம் வந்த சிவன், தாம் திருமணமாகாத ஒரு இளைஞன் என்பதனை அறிவுறுத்துவதற்கு அடையாளமாகத், தம்முடைய பூணூலில் ஒரு துண்டு மான்தோலைக் கட்டிக்கொண்டார் என்பது பார்ப்பனகுல முறைப்படி தவறல்ல—முறைதான் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டாலும், அவர் தண்டின்மீது ஒருகட்டுத் தருப்பைப் புல் இருந்ததாகக் கூறப்படுவதன் நோக்கமென்ன? ஒருவேளை, திருமணமாகாத பார்ப்பன இளைஞர்கள், தங்களை இன்னார் என்று பிறர் தெரிந்துகொள்வதற்கு அடையாளமாகத் தருப்பைப் புல்லும் தாங்கி நிற்கவேண்டும் என்ற குலக் கட்டுப்பாடு அவர்கட்கு உண்டென்று கொள்வதற்கும் இல்லையே! ஏனென்றால், திருமணமான பார்ப்பனர்தான் பெரும்பாலும் தருப்பைப் புல், பஞ்சாங்கம் ஆகியவைகளைத் தாங்கிச் செல்வதைக் காண்கின்றோம். அதுவும், திதி, திவசம், தர்ப்பணம் முதலான ஆரியச் சடங்குகளைச் செய்யும் பார்ப்பனரே தருப்பைப் புல்லைத் தாங்கிச் செல்வதைப் பார்க்கின்றோம். இனி, ஒருவேளை திருமணமாகாத பார்ப்பன இளைஞர்களும் திதி—திவசம்—தருப்பணம் ஆகிய சடங்குகளைச் செய்வதில் ஈடுபடுகின்றார்கள் என்றால், அதனை அவர்கள் தாராளமாகச் செய்யட்டும்; நாம் அதற்குக் குறுக்கே நிற்கவில்லை. ஆனால், திருமணமாகாத பார்ப்பன இளைஞர்களைக் குறிக்கும் அடையாளமாக மட்டும் தருப்பைப் புல் கட்டும் ஒன்றாக இருக்கும்—மற்றைப் பார்ப்பனரிடம் அது இருக்காது என்று கூறுவதையே நாம் இங்கு குறிப்பிட்டுக் கண்டிக்கிறோம்.

இனி, அமர்நீதியிடம் வந்த பார்ப்பன இளைஞன், தாம் தாங்கிவந்த தண்டில், இரு கோவணங்களையும், ஒரு திருநீற்றுப் பையையும், தருப்பைப்புற்கட்டையும் கட்டிக்கொண்டு வந்தார் என்று சொல்லியதோடு மட்டும் நின்றுவிடாமல், அவர் கோவணத்தையே ஆடையாகவும், அதனைக் கட்டுவதற்குத் தருப்பைப் புல்லையே கயிறாகவும் கொண்டிருந்தார் என்றும் கூறப்படுகின்றது. இவையும் திருமணமாகாத பார்ப்பன இளைஞர்களைக் குறிக்கும் அடையாளங்கள் போலும்! ஆனால், இஞ்ஞான்றைத் திருமணமாகாத பார்ப்பன இளைஞர்கள் எவரும், தம்முடைய ஆடையாகக் கோவணத்தையும், அதனைக் கட்டும் கயிறாக தருப்பைப் புல்லையும் பயன்படுத்துவதில்லை. அவர்களும் திருமணமான பார்ப்பனரைப் போலவே ஆடையும் அரைஞாணும் கட்டிக்கொள்கிறார்கள்; எந்தப் பார்ப்பன இளைஞனும் தன்னுடைய இடுப்பில் தருப்பைப் புற்கயிற்றைக் கட்டி அதில் ஒரு கோவணத்தை மட்டுமே அணிந்து கொண்டு தன்னை ஒரு திருமணமாகாத பார்ப்பன இளைஞன் என்று காட்டிக்கொள்வதில்லை. ஆனால், சிலர், உலகப் பொதுப் பண்புக்கே மாறுபட்ட முறையில், மானம்—வெட்கமின்றி ஒரு கோவணத்தை மட்டும் கட்டிக்கொண்டு, தாங்கள் இல்வாழ்க்கையை வெறுத்த துறவிகள் என்று தெருக்களில் அலைந்து திரிந்து உலகத்தை ஏமாற்றி வயிறு பிழைக்கின்றார்கள். இத்தகைய இழிதகைமையினரைத் தவிர, மற்றெவரும் கூசாது கோவணாண்டிக் கோலத்தில் திரிவதேயில்லை. அப்படி ஒருகால், குலக் கட்டுப்பாட்டுக்கு அடங்கி எந்தப் பார்ப்பன இளைஞனாவது, தன்னைத் திருமணமாகாதவன் என்று அறிவிப்பதற்காகக் கோவணத்தை மட்டும் கட்டிக்கொண்டு நடமாடினால், உண்மையாகவே அப்படிப்பட்ட இளைஞனுக்கு எந்தப் பார்ப்பனரும் தங்கள் பெண்ணைத் திருமணம் செய்து

(14-ம் பக்கம் பார்க்க)

16-ம் பக்கத் தொடர்ச்சி

குதிரைங்கபோல இல்லாமே; ரகம் குறைஞ்சுட்டா, உலகத்தாரு, நம்மை பாத்துச் சிரிப்பாங்கடி சிரிப்பாங்க! நம்ப நாட்டையும் கேவலமா நினைப் பாங்கடி!"

"என்ன இது? விசித்திரமா இருக்கே? நீங்க பேசறது எதுவுமே புரியலையே?"

"புரியாதடி புரியாது, உனக்கு! நீ என்ன காலேஜிலியா படிச்சிருக்கே? சட்டமா தெரிஞ்சிருக்கே? இல்லே, நாட்டையாவது ஆளறையா? எந்தக்கேடு மில்லையே? என்னை அதிகாரம் பண்ணிக்கிட்டிருக்கே? குடும்பம் குடும்பமுண்ணு, என்னை தொல்லைப்படுத்துறே! இது ஒண்ணு தாண்டி உனக்குத்தெரியும்?"

"குழந்தைகுட்டிகளைப்பத்திக்கவலை கொள்ளாமே, உங்களாட்டம் குதிரைக்குஅழுதுட்டுவாரச் சொல்லிறிங்களா?"

"குதிரைப் பந்தயத்திலே பணம் கட்டறது சக்காரியமடி! நாட்டுக்குச் செய்யற பெருஞ்சேவையடி! இதெல்லாம் உனக்கு எங்கேடி புரியப்போவுது?—அதெல்லாம் கிடக்கட்டு மடி—தடை சொல்லாமே, உன்கையிலெ இருக்கிற பவுன்வளையிலிலே ரெண்டு கொடு!"

"எதுக்காம்? போனது போதாதுன்னு, இந்த இரண்டு வளையலுக்கும் வழி வைக்கிறிங்க?"

"மயிலே மயிலேண்ணு இறகு போடுமா? கொடுக்கிறதைக் கொடுத்தாதானே; நான் கேட்டதை நீ தருவே!"

* * *

அவன் ஓர் அரசன்; இராணிக்குத் தலைமயிர் குட்டை. அரசன் உத்தரவிடுகிறான், நீண்டதலைமுடிவேண்டாமென்று. ஆணை நிறைவேற்றப்படுகிறது. பல கன்னியர்களின் முடி வெட்டப்படுகிறது. அவர்கள் அழகு குலைக்கப்படுகிறது. இராணியின் சடை நீளுகிறது. மன்னன் மகிழ்ச்சியடைகிறான்.

ஒருத்திக்கு அழகு கூட்ட, பலரின் அழகு அழிக்கப்படுகிறது. இது நீதியாகுமா? இந்தப்போக்கை எவரும் கண்டிப்பர்! ஆனால் இதுதான் நீதி என்கிறார் மந்திரி சுப்பராயன்!

17—9—47ல், குதிரைப் பந்தயம் நடக்கும் நாளில், குதிரைகள் மீது பணம் கட்டிப் பந்தயம் ஆடுவதைத் தடுக்கும் மசோதா ஒன்றைக் கொண்டுவரத் தோழர் அப்துல் லதீப் பரூகி, மேல் சபையில் அனுமதிகோரினார். அதனை அனுமதிக்கக் கூடாதென அமைச்சர் சுப்பராயன் கூறினார். தோழர் பரூகியின் கோரிக்கைக்கு 22-பேர்பாதகமாகவும், 11 பேர் சாதகமாகவும் ஓட்டளித்தனர். தோழரின் வேண்டுகோள்தோற்றது.

இந்தக்கோரிக்கையின்மீது அமைச்சர் சுப்பராயன், எடுத்துக்காட்டிய நியாயங்களைப் படிப்பவர்களுக்கு, முன்குறிப்பிட்ட அரசனின் செயல் தான் நினைவிற்குவரும். குதிரைகள் தேசத்தின் செல்வமாம். நமது நாட்டில் குதிரைகளின் தரம் உயர்ந்து வருவது ஆரம்பநிலையில் இருக்கிறதாம். இங்குள்ள குதிரைகளின் நிலையை உயர்த்துவதற்கு இங்கிலாந்திலிருந்து குதிரைகள் இறக்குமதி செய்யப்படுகிறதாம். ஓளவிற்கு இங்கு குதிரைகள் இங்கிலீஷ் தரத்தை எட்டிப்பிடிக்கும் நிலைபெற்றிருக்கிறதாம். இந்தநிலை மேலும் வளரவேண்டுமானால், குதிரைப்பந்தயம் தொடர்ந்து நடைபெற வேண்டுமாம், இத்துடனும் மந்திரி நிற்கவில்லை.

முஸ்லிம் அங்கத்தவர்களுக்கும் எச்சரிக்கை செய்கிறார். அதாவது அரேபியாதான் குதிரைகளுக்குப் பேர் போனதாம். இருந்தாலும் இன்று அரேபிய குதிரைகளைவிட, இங்கிலீஷ் குதிரைகள்தான் உயர்ந்த நிலையில் இருக்கிறதாம். இந்த அபச்சொல் இந்தியாவிற்கும் ஏற்படாமல் இருக்கவேண்டுமானால், இங்கு குதிரைப்பந்தயம் நடைபெற வேண்டுமாம்! இவ்வளவுதானா?

பம்பாயில் குதிரைப்பந்தயம் தடுக்கப்படவில்லையாம். கல்கத்தா குதிரைப்பந்தப சங்கத்திற்கு, வங்கக்கவர்னர் இராஜகோபாலாச்சாரியார் ஒரு வெள்ளிக்கோப்பையும் பரிசாக வழங்கியுள்ளாராம். ஆதலால் குதிரைப் பந்தயத் தடுப்பு அகில இந்திய விவகாரமாகக்கொண்டு, தீர்க்கப்பட வேண்டுமாம்! இது மட்டுமா?

வேறெந்த முக்கியமான விஷயங்களிலும் நமது அமைச்சருக்கு மாகாணப்பற்று இல்லாமல்போன போதிலும், குதிரைப்பந்தய விஷயத்தில் அவர் அந்தப்பற்றுதலைக் காட்டத்தவறவில்லை. குதிரைப் பந்தயம் சென்னையில்மட்டும் நிறுத்தப்பட்டுவிட்ட போதிலும், இந்தியாவின் மற்றப் பகுதிகளில் நடைபெறுமாம். அதனால் ஏற்படும்வருமானத்தையும் அந்தப்பகுதிகள்அடையுமாம். இங்கு வருமானம் குறைந்துவிடுவதோடு, "இராஜவிளையாட்டு"க் காணஇருக்கும் வாய்ப்பும் மக்களுக்கு இல்லாமல் போய்விடுமாம்! இத்துடன் அவர் நிற்பாரா?

குதிரைப் பந்தயத்தால் பட்டுத்தான் மக்கள் சூதாடிக் கெட்டுவிடுகிறார்களா? 'ஷேர்' 'ஸ்டாக்' முதலியவைகளில் மக்கள் சூதாடவில்லையா? முன்னையதைக் காட்டிலும் பின்னையதிலல்லவா மக்கள் அதிகம் சூதாடுகிறார்கள்! என்றும் அமைச்சர், அறிவுரை புகல்கிறார். அமைச்சர் சுப்பராயன், 16 ஆண்டுகள் சென்னைக் குதிரைப் பந்தய சங்கத்தின் நிர்வாகஸ்தராக இருந்திருக்கிறாராம். ஒருநாள்கூட அவருக்குப் பந்தயம் கட்டும் ஆசையே உண்டானதில்லையாம். அச்சங்கத்தின் தொடர்பு அறுந்த பிறகு, அந்தப் பக்கமே எட்டிப்பார்ப்பதுகூடக் கிடையாதாம். சென்ற ஆண்டில் சர்க்காருக்கு 30 லட்ச ரூபாய் இந்த இனத்தில் வரு'ானம கிடைத்ததாம். இந்த இனம் மேலும் மேலும் வருமானத்தைக் கொடுக்கக்கூடிய இனமாம். மதுவிலக்கால் ஏற்படும் நஷ்டத்தை, இந்த வருமானத்தின் மூலம் கொஞ்சம் ஈடுசெய்யலாமாம். இதுவும் சுப்பராயன் கூறினதுதான்!

காந்தியின் சீடர்களாயிற்றே நீங்கள்—அவர் குதிரைப் பந்தயங்களைக் கண்டிக்கிறாரே—அவரின் சிஷ்யர்களென்று சொல்லிக்கொள்ளும் நீங்கள் இப்போக்குக் கொள்வது முறையா? — என்றெல்லாம் கேட்கிறார் பரூகி. விளைவு, அவர் வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டதுதான்!

குதிரைகள் நாட்டுச் செல்வமாம்! இந்த நாட்டில் குதிரைகள் எதற்கு உபயோகப்படுத்தப் படுகின்றன? வண்டி இழுப்பதற்கன்றி வேறு எதற்கு? முன்னே மூவர் இழுக்க, பின்னிருந்து இருவர் தள்ள, வண்டிக்காரன் மேல்விழுந்து குதிரையின் புறமுதுகைக் கடிக்கவுமான எலும்புக் கூடாகவுள்ள தெனாலிராமன் குதிரைகளை அல்லவா நாம் தினம் தினம் பார்க்கிறோம்! இதுவன்றோ நாட்டுச் செல்வத்தின் தன்மையாக இருக்கிறது!

குதிரைப் பந்தயத்திலே ஓடும் குதிரைகள், பந்தயத்தில் ஓடுவதற்குத் தவிர வேறு எதற்கும் உதவாதே! ஆயிரக்கணக்கில் விலையாக இருந்த போதிலும், அவைகள் மக்களின் உழைப்பைக் குறைக்கும் வகைக்குப் பயன்படாவே! புதுப் புது இயந்திரங்கள் பெருகிவிட்ட பின்னர், குதிரை, நாட்டுச் செல்வம் எனும் பட்டியிலிருந்தே தள்ளப்பட்டு விடுமே!

இன்றுபந்தயக் குதிரைகள்வளப்பமடைவது எவர் செலவில்? சர்க்கார் பெறும் 30 லட்ச வருமானத்தில் பெரும் பகுதி, அபலைகள் கண்ணீரில் மிதந்த பணமல்லவா? பலகுடும்பங்களின் நாசத்தில் விளைந்த விளைவல்லவா? அந்த ரூபாய்களுக்கு வாயிருந்தால், எந்தெந்த விதமான சோகக் கதைகளை எடுத்துக் கூறும்! இதனை மந்திரியார் அறியாரா?

மதுவிலக்கால் ஏற்படும் நஷ்டத்தை, சூதாட்ட வருமானத்தால் ஈடு செய்யப் போகிறேன் என்பது, நல்லறிவு படைத்தோரின் செயலாகாது. கட்குடி எவ்வளவு தீமையோ, அதிலும் நூறுமடங்கு தீமையுடையது சூதாட்டம். தோழர் பரூகி எடுத்துக் காட்டியதுபோல் கட்குடிக்கு, குடிப்பவன்மயங்கி விழுவது ஓர் வரம்பாக உள்ளது. ஆனால் சூதாட்டம் அவ்வாறு அல்ல. இமை மூடிதிறப்பதற்குள் நூறு இருநூறு, ஆயிரம் பத்தாயிரம் எவ்வளவு இருந்தாலும் மாயமாக மறைந்து விடுகிறது. சூதாட்டத்திற்கு அவ்வளவு சக்தி உண்டு, மனிதனை அடிமைப் படுத்துவதற்கு!

'ஷேர்' 'ஸ்டாக்' முதலியவற்றில் சூதாட்டம் நடக்கவில்லையா என்று கேட்கிறார் அமைச்சர். இதனைத் தடுக்கவேண்டாமென எவர் கூறினது? செய்யவேண்டியவர்கள், அதற்கான அதிகாரம் மக்களிடம் பெற்றுள்ளவர்கள் — அத்தகைய சூதாட்டங்களைத் தடுக்கக் கடமைப் பட்டிருக்கும்பொழுது, அதனை இதுவரையில் செய்யாமல் இருப்பதே பெரும் குற்றமாகும். அதற்கு மாறாக, தடுக்கப்பட வேண்டிய மற்றொரு சூதாட்டத்தைத் தடை செய்யாமல் இருப்பதற்கு, வேறொரு செய்யப்படாத ஒன்றை ஆதாரமாகக் காட்டப் புறப்படுவது மன்னிக்க முடியாத குற்றமாகும்!

சில குதிரைகள் கொழுப்பதற்காக—அதன் ஓட்டத்தைச் சில செல்வர்கள் கண்டு களிப்பதற்காக—ஏழைக் குடும்பங்கள் பலவற்றின் வாழ்வு கருகவேண்டுமா? மக்கள் வாழ்வில் வளங்காண முற்படாத ஒரு நாட்டை, அந்த நாட்டில் வளமுள்ள புரவிகள் உள்ளன என்பதற்காக—மற்றெந்த நாட்டாரும் மதிக்க மாட்டார்கள். மக்கள் வாழ்வைப் பணயம் வைத்தா, சில குதிரைகளைக் கொழுக்கவைக்க வேண்டும்? அதுவும் மக்களுக்குப் பயன்படாத குதிரைகளை?

மக்களை மருட்டி வாழ்ந்த மண்டலாதிபதிகள் மண்ணைக் கவ்வின பின்னரும், பலர் உழைப்பில் பளபளப்புடன் வாழும் ஆதிக்கக்காரர்கள்முறை ஆட்டங் கொடுக்கும் நிலை நாட்டில் உண்டான பின்னரும், சில குதிரைகளைக் காப்பதற்காக மக்களைப்பலியிட மந்திரியார் முனைவது வேடிக்கை மட்டுமல்ல — வேதனை நிறைந்ததுமாகும்!

இந்தியக் கலாசாரத்தைக் காப்பாற்றுவதாக இனி அமைச்சர் கூறினாலும் கூறக்கூடும். சூதாட்டத்தால் நாடிழந்த நல்லவர்களும், மனையிழந்த மதிப்புக்குரிய மன்னர்களும், மலிந்துள்ள பூர்வ பெருமை கொண்ட நாடல்லவா பரதகண்டம். இதனை, தமது கலாச்சாரத்திற்கு எடுத்துக் காட்டாகக் காட்டி, இது அழியாமல்இருக்கவேண்டுமானால் குதிரைப் பந்தயங்கள் நடைபெற வேண்டும் என்று வாதிட்டாலும் வாதிடுவார் அமைச்சர். ஆளும் அதிகாரமும், அது சரியெனச் சொல்லிச் செயல் புரிய நாட்டில் ஓர் கட்சியும், ஆதரிக்கச் செல்வாக்குள்ள ஏடுகளும் உள்ள ஒரு நாட்டில் மக்களுக்குக் கேடு சூழ்ந்து குதிரைக்கு நலஞ் செய்யப்போரறிவாளர்கள்கிளம்புவது இயற்கைதானே?

குமாரமங்கலம் குதிரை வளர்ப்பு இந்த நிலையில் இருக்கிறது. இங்குள்ள மக்கள் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தி, பிறநாட்டார் அதனைக் கண்டு, இந்நாட்டை மதிக்கும் நிலை பெறுவதை அவர் அவ்வளவு பெரியதாகக் கருதவில்லை. இங்குள்ள ஒன்றுக்கும் உதவாத சில குதிரைகளின் தரத்தை உயர்த்தி, அதன் மூலம் நமது நாட்டின் புகழை நிலைநாட்ட முனைந்துள்ளார். சபாஷ் குமாரமங்கலம்! மக்களின் சாபம் தங்களுக்குச் சம்பவித்தாலும், அஸ்வ ரக்ஷகன் எனும் புகழாவது தங்களுக்கு மீதமாகும். வரலாற்றிலும் தாங்கள் இடம் பெறுவீர்!

தாம் ஆதரிக்கும் கட்சியினர் எடுக்கும் நடவடிக்கையை வெளிப்படையாகக் கண்டிக்கலாமா? தவறானதானாலும், நீதி-நேர்மைக்குப் புறம்பானதானாலும் கண்ணை மூடிக் கொண்டு பின்பற்றுவதல்லவோ கட்சிக் கட்டுப்பாட்டுக்கு உயிர் நாடி?-என்றெல்லாம் சிந்திக்காமல், குதிரைப்பந்தயத் தடை விஷயத்தில் சுப்பராயனின் கோணல் போக்கை, அம்பலப் படுத்திவிட்டது 'பாரத தேவி.' மகிழ்ச்சிக்குரிய விஷயமட்டுமல்ல, மற்றவர்கள் பின் பற்றுவதற்குரிய சிறப்புடைச் செயலுமாகும். குதிரைப் பந்தயத்தில் அவருக்குள்ள மோகத்தை விளக்கிக்காட்டி, ஆணித்திறமாகக் கண்டித்துமிருக்கிறது. அதிற் சில பகுதிகளை இதன் கீழ் தருகிறோம்:—

"தான்கெட்டதுமல்லாமல் சந்திர புஷ்கரணியையும் கெடுத்தான்என்று சொல்லுவார்கள். டாக்டர் சுப்பராயன் காட்டும் மனப்பான்மை அப்படித்தான் இருக்கிறது. குதிரைப் பந்தய ஒழிப்பு விஷயத்தில் டாக்டர் சுப்பராயன் செய்யும் பிடிவாதம் தலைகீழ் ராஜ்யமாயிருக்கிறது. தனி ஒரு மனிதனுக் குணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம் என்று பாரதி சொன்னதைச்சென்னை மந்திரிசபை மாற்றி அமைத்துக் கொண்டிருக்கிறது போலிருக்கிறது. ஆயிரக்கணக்கான குடும்பங்கள் அழிந்தாலும் சில தனிப்பட்ட மனிதர்களின் பொழுதுபோக்குத்தான் முக்கியம் என்கிறார்கள் சென்னை சர்க்கார்."

"பணக்காரர்களின் தயவு இந்த மந்திரி சபைக்கு அவசியமாயிருக்கலாம். அவர்களை விரோதித்துக் கொள்ளுவதற்கு இவர்களுக்குப் பயமாயிருக்கலாம். ஆனால், சர்க்காரே இதைச் செய்யாவிட்டாலும் மற்றவர்களுடைய முயற்சிக்காவது ஆதரவளிக்கலாமல்லவா? சென்னை கவுன்ஸிலில் நேற்று முன்தினம் ஸ்ரீ. பரூக்கி கொண்டுவந்த மசோதாவுக்குச் சர்க்கார் ஆதரவளித்திருக்கலாம். அதற்கு மாறாக டாக்டர் சுப்பராயன் அதைக் கடுமையாக எதிர்த்தார்."

"சர்க்கார் மது விலக்குக் கொள்கையை அனுஷ்டிப்பதால் பலவழிகளிலும் தங்களுடைய வருமானத்தை அதிகரித்துக் கொள்ள

(11-ம் பக்கம் பார்க்க)

# "இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்?"

"சரியானபுள்ளி! இனிக் கோவை வட்டத்திலே நமக்குச் சரியான சான்சுதான்!!"

"நமக்கு என்று கூறுவானேன்? நாட்டுக்கு என்று கூறுமே!"

"நாம் வேறு, நாடு வேறு?"

"அதுவும் வாஸ்தவமே! மேலும், ஆசாமி நல்ல செல்வந்தர்-...."

"செல்வம் வேறு பலரிடமும் உண்டு; ஆனால் இவரிடம் உள்ள விசேஷம் என்னவென்றால்...."

"என்ன....?"

"இவருடைய பிதா, நல்ல பகவத் பக்தியும், பிராமண சேவா உணர்ச்சியும் கொண்டவர்."

"ஆமாம் அவர் வீட்டிலே, சதா, சத்கதா காலட்சேபம் நடைபெற்றபடி இருக்குமாமே"

"ஆமாம். அப்படிப்பட்டவருடைய திருமகன், நமக்குக் கிடைத்தது, பாக்கியம்தான்"

"தேசபக்தியை, பிராமணப் பக்தி மிக்கவரின் திருமகன் பெற்றதிலே ஆச்சரியம் என்ன?"

"தேசபக்தி வேறு, பிராமணபக்தி வேறே!"

* * *

தேசபக்திக்கும் பிராமண பக்திக்கும் வித்யாசம் கூட இல்லாதிருந்த காலம் அது. அந்த நாட்களிலே, வெள்ளையர் ஆட்சியை எதிர்க்க, நாட்டிலே ஒரு முயற்சி துவக்கப்பட்டபோது, ஒவ்வொரு ஊரிலேயும், பிரமுகர்கள், வியாபாரிகள், செல்வாக்குள்ளவர்கள், வக்கீல்கள் ஆகியோரை, வலைவீசிப் பிடிக்கும் காரியத்தை வெற்றிகரமாகக் காங்கிரஸ் செய்து வந்தது. அதிலே, இரு பெரும் வெற்றிகள் என்று அந்த நாட்களிலே கருதப்பட்டவை, ஒன்று, சேலம் பிரபல வக்கீல் ராஜகோபாலாச்சாரியார் காங்கிரசுக்கு வந்தது, இரண்டாவது ஈரோடு சேர்மனும் பிரபல வியாபாரியுமான ஈ. வே. இராமசாமி, காங்கிரசில் சேர்ந்ததுமாகும். ஆச்சாரியாருக்கு, கனமான சட்டபுத்தகங்கள் மட்டுமே, உடனிருந்தன. ஈரோடு சேர்மனுக்கோ, அழகான மாளிகை, வளமான வயல், பலரகவீடுகள், கொடுக்கல் வாங்கல், இத்யாதி அமோகம்.

எனவே, சரியானபுள்ளி சிக்கிவிட்டார், இனித் தேசபக்தியின் சாக்கு வைத்து, பிராமண ஆதிக்கத்துக்கு அவரைக் கொண்டு பல சாதித்துக் கொள்ளலாம், என்று பிராமணத் தலைவர்கள் பேசிப்பூரித்தனர். துவக்கத்திலுள்ள உரையாடல், அதைக் குறிப்பதுதான்.

அவர்கள் பூரித்ததுதான் மிச்சம்—காரியம் பலிக்கவில்லை. நாட்டுக்குப் பணிபாற்றக்கிளம்பியவர், நாட்டுக்கு உடையவர் யார், அதை உருக்குலைப்பவர் யார் என்று ஆராயத் தொடங்கினார். தென்றல் புயலாயிற்று! அவர் போர் புரிவது வெள்ளையருடன் மட்டுமல்ல, இந்நாட்டுக் கொள்ளைக்காரருடனும் போர்புரிகிறார் என்று, கண்டு பிடிக்க, காங்கிரஸ் தலைவர்களுக்குச் சில காலம் பிடித்தது. இதை அறிந்து அவர்கள் அவரை நீக்க முஸ்தீபுகள் செய்தவண்ணம் இருந்தனர். காஞ்சிபுரத்திலே, கூடிய காங்கிரஸ் மாநாட்டிலே, பெரியார், போர் முரசு கொட்டிவிட்டு வெளிக்கிளம்பினார். அன்று துவக்கிய பயணம், இன்றும் ஓய்வின்றி நடைபெற்றவண்ணம் இருக்கிறது—இப்போது அவருக்கு வயது 69!

இதற்கிடையே, அவர் சுயமரியாதை இயக்கம் கண்டார், சமதர்மப்பிரசாரம் செய்தார், ஜஸ்டிஸ்கட்சிக்குப் புதுவாழ்வு தந்தார், திராவிடர் கழகமாக்கி, இன அரசு பெற வேண்டும் எனும் இலட்சியத்தைஉருவாக்கி, அதனை நாட்டினருக்கு எடுத்துக்கூறிவரும், பல வெற்றிகளைப் பெற்றிருக்கிறார்.

இவ்வளவு நீண்டகாலம், பொது வாழ்வில் இருக்கும் வாய்ப்பு, ஒரு சிலருக்கே கிடைத்திருக்கிறது; ஆச்சாரியார் ஓர் எடுத்துக்காட்டு. ஆனால் அவருடைய பொது வாழ்விலே, ரோஜா அதிகம், முள் குறைவு—பெரியாருக்கோ, கள்ளி காளான் நிறைந்த பாதையிலேநடந்துசென்று புதுக்கழனிதேடுவதுபோன்றபொது வேலை—இதிலே, அவர், இவ்வளவு நீண்டகாலம் ஈடுபட்டிருப்பது, ஆச்சாரியார், இருப்பதைவிட, விசேஷமான சம்பவம்,என்பதில் ஐயமில்லை. ஆச்சாரியாருக்கு, பொதுவாழ்விலே இருந்த அபிலாஷைகள் ஏறக்குறைய வெற்றியாகிவிட்டன—காங்கிரஸ் நாடு ஆள்கிறது—அவர் வங்கத்தை ஆள்கிறார்

பெரியாரின் 'அபிலாஷை' வெற்றி பெறும், சூழ்நிலை ஏற்படுவதும்,மீண்டும் மாறுபடுவதுமாக 'இருந்துவருகிறது. காரணம் என்ன? குறிக்கோள், நிரந்தரமானதாகக்கொண்டு, காங்கிரசார், போரிட்டனர்—வென்றனர். பெரியாரின் குறிக்கோள், அவருடைய தொண்டு வளர,வளர, விரிவாகிக்கொண்டே போன காரணத்தால், வெற்றிகரமான முடிவு இன்னும் ஏற்படவில்லை. ஆனால் உடனடியான வெற்றி முக்கியமா அல்லது, குறிக்கோளின் தரம் உயர்ந்து கொண்டு போகும்படி அதற்கு வளர்ச்சி தரும் காரியத்திலே கருத்தைச்செலுத்துவது முக்கியமா என்றுகேட்டால், நிச்சயமாகக்குறிக்கோளின் தரத்தை உயர்த்தும் காரியமே முக்கியமானது என்போம். அந்தக்காரியம், சேலம் மாநாட்டிலே குறிப்பிடத்தக்க அளவில் வெற்றி பெற்றது. அதுவரை பெரியார் ஆற்றியதொண்டு, குறிக்கோளைக் கண்டறிதல், என்னும் கட்டம் —அதற்குப்பிறகு-கண்டறிந்த குறிக்கோளை அடைவதற்கான அரும்பணி. இந்த அரும்பணியினைத்திறமையுடன், ஆற்றும் உறுதிபடைத்த, பெரும்படையும் இன்று அவர் வசம் இருக்கிறது. கருவிகளும் குவிந்துகிடக்கின்றன.

இவ்வளவு நீண்ட காலப் பொது வாழ்வு, எப்படிப்பட்ட தலைவருக்கும், தனிவாழ்வைச் சிதைத்துவிடும். இதனினும், குறைந்த அளவுள்ள காலம் பொது வாழ்வில் இருந்தவர்களின், சொத்துச்சூறையாடப்பட்டு, வார்சுகள், தத்தளிக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. தியாகராயரின் செல்வம்—பொதுவாழ்வு எனும் பலி பீடவதுக்குக் 'காவு' கொடுக்கப்பட்டது. பானகலும் நாயரும், பார்ப்பனரல்லாதார் இயக்கத்திலே பாடுபட்ட வேறு பல தலைவர்களும், சொத்திழந்து, குடும்பச்

(10-ம் பக்கம் பார்க்க)

# திராவிட நாடு

காஞ்சி] 28—9—47 [ஞாயிறு


## அங்கு, அவர்கள்!

மலாய் நாட்டிலே, தோட்டக்காடுகளிலே, தமிழர் படும் அவதிபற்றிச் சின்னாட்களுக்கு முன்பு, நெஞ்சுருக்கும் செய்தி வெளியிட்டிருந்தோம்.

சீனத்தொழிலாளிக்குத் தரப்படும் கூலியிலே, பாதி அளவுக்கும் குறைவாகத் தமிழருக்குத் தரப்படுகிறது.

இந்த அக்ரமம் கூடாது என்று, இங்கிருந்து அரசாங்கத்தால் அனுப்பப்பட்ட அதிகாரியே கூறினார்.

தொழிலாளர்களும், கிளர்ச்சி செய்கின்றனர். மலாய் துரைத்தனந்தார், அந்தக் கிளர்ச்சியை ஒடுக்க, அடக்குமுறையை அவிழ்த்துவிட்டு விடுவதே சரியான முறை என்று எண்ணுகின்றனரே யொழிய, அநீதியை ஒழித்து, தமிழர்களுக்குச்சரியான, போதுமான, வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளுக்கேனும் வசதி கிடைக்கும் அளவு, 'கூலி' தரவேண்டும் என்ற நோக்கம் கொண்டதாகத் தெரியவில்லை.

கூட்டமா? தடை, போடு! மீறுகிறார்களா? சுட்டுக் கொல்லு—என்ற ஜார் போக்கே, அங்கு காணப்படுகிறது.

மலாய் நாட்டுத் தமிழர்கள் மனம் நொந்திருக்கும் நிலையை நாம் விளக்கி, அவர்களின் நியாயமான கோரிக்கையைத் தாய்நாடு ஆதரிப்பதுடன், அவர்களுக்குப் பக்கபலமாக நிற்கிறது, என்பதை உலகறியச் செய்யவேண்டுமென்று கூறினோம். ஓரிரு இடங்களிலே திராவிடர்கழகங்கள், மலாய் நாட்டுத் தமிழர்களை ஆதரித்துத் தீர்மானம்நிறைவேற்றின. ஆனால் இது போதாது. இந்திய சர்க்காரிடமும், மலாய்சர்க்காரிடமும், தந்திகளும் தபால்களும் குவிய வேண்டும். மலாயிலுள்ள தமிழர்களுக்கு இழைக்கப்படும் அநீதியை, நாம் சகித்துக் கொள்ள மாட்டோம், என்பதை விளக்க வேண்டும். தாய்நாடு, நம்மைக் கைவிடவில்லை, நமக்காகப் போராடுகிறது என்ற எண்ணம், மலாய் வாழும் நம் இனத்தவர் மனதிலே, பதிந்தால், அவர்கள் இப்போது, கொண்டுள்ள உறுதியைவிடப் பன்மடங்கு அதிகமாகக் கொள்வர். இதற்கு இங்கு நாம் செய்யவேண்டியவை, ஒன்று, நாடெங்கும், மலாய் நாட்டுத் தமிழர்கள் எவ்வளவு கொடுமைக்கு ஆளாகிவருகிறார்கள் என்பதை விளக்க வேண்டும். இரண்டாவது, அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும்படி, மலாய்சர்க்காரை வற்புறுத்தும்படி, இந்திய சர்க்காரை, வற்புறுத்தித் தீர்மானம் நிறைவேற்றி மலாய்சர்க்காருக்கும், இந்தியசர்க்காருக்கும், அனுப்பி வைக்க வேண்டும். மேற்கொண்டு வேறுபல நடவடிக்கைகள் உள்ளன. ஆனால் முதலில் செய்யப்படவேண்டிய காரியமே, துவக்கப்படவில்லை. எனவே, மீண்டும், தோழர்களுக்குக் கவனப்படுத்துகிறோம், கடல்கடந்து சென்று, கண்ணீர் வடித்து, வதைகின்றனர் இலட்சக் கணக்கான தமிழர்கள். அவர்களுக்கு இன்னல் வந்துற்றபோது கவனியாதிருப்பது, இனத்துரோகம். எனவே, அவர்களின் குறைதீர்க்க நம்மாலான சிறு உதவியேனும் செய்யநாம் தவறக் கூடாது என்பதை.

மலாய் நாட்டுத்தமிழர்களின் நிலையையும், அவர்களின் உறுதியையும் விளக்கும், ஒரு சிறு கட்டுரை, இங்கு வெளியிட்டிருக்கிறோம். கோலாலம்பூர், 'ஜனநாயகம்' எனும் தினசரியிலிருப்பது. தமிழர்படும் துயரை இஃது எடுத்துக் காட்டுகிறது.

தமிழகத்தின் விடுதலைக்குப்பாடுபடும் நோக்கமுடையோர், திராவிடத் தனி அரசு கோரும் நாம், பாட்டாளிகளின் விடுதலைக்குப் பாடுபடுபவர்கள், ஆகியோர் ஒன்றுகூடி, மலாய் நாட்டிலே, தமிழர்கள் பட்டுவரும் கஷ்டங்களை எடுத்துக்கூறி, பொது மக்களின் கருத்தைத் திரட்டி, அதனைத், தவிக்கும் தமிழருக்குத்துணை தரும் கருவியாக்க வேண்டுகிறோம். இந்த அவசியமான காரியம் உடனடியாகச் செய்யப்பட வேண்டும். கோலாலம்பூர், ஜனநாயகம், 29-8-47-ல் எழுதுகிறது:—

"நாங்கள் கேட்பதெல்லாம் உணவுதான், உயிருடன்வாழச் சாதாரண வாழ்க்கை வசதிகள்தான், ஆனால் அது எங்களுக்கு மறுக்கப்பட்டது." என்று அ. ம. ர. தொ. கவுன்சிலின் உருக்கமான அறிக்கை கூறுகிறது. ஓய்வு ஒழிச்சலின்றி அல்லும் பகலும் உழைத்துக் கட்டத் துணியுமின்றிக்கால்வயிற்றுக் கஞ்சிக்கு வழியுமின்றி ஒட்டிய வயிறும், குழி விழுந்த கண்களுடனும் நடைப்பிணங்களாய் எத்தனை நாளைக்கு முதலாளி வர்க்கத்திற்கு உழைத்தாமுடிகிறது? பாம்பு புலி கரடி வாழும் கானகத்திலே ரப்பர் பால் வெட்டச்சென்று உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு காலையிலிருந்து மாலை வரைஇரத்த வியர்வை சொட்ட உழைத்து விட்டு ஊதியம் சிறிது [உணவு] கேட்டால் முதலாளி வர்க்கத்திற்குக் கோபம் வந்துவிடுகிறது. அடி வயிற்றில் புளி கரைந்தது போல் கலங்குகிறது, ஆர்ப்பரிக்கிறது, கொக்கரிக்கிறது, கூப்பாடு போடுகிறது, அங்கலாய்க்கிறது, ஆயாசப்படுகிறது, எல்லாம் செய்கிறது. எதற்காக இந்தச் சூழ்ச்சிகளும் தந்திரங்களும்? தொழிலாளரின் உழைப்பால் உண்டு களித்து ஆடம்பர சுகபோக வாழ்வில் திளைத்து வரும் முதலாளி வர்க்கம் பாட்டாளிகளின் துயரை உணர்ந்ததாய்த் தெரியவில்லை? 20 சத விகிதம் சம்பளக் குறைப்புத் திட்டத்தை ம. ஐ. தோட்ட முதலாளிகள் சங்கம் கொண்டுவந்து அமல் நடத்தப் பார்க்கின்றது. ஆனால் இதற்கு மாறாக இளகிய மனம் படைத்த ஒரு சில தோட்டமுதலாளிகள்உதாரணமாக, மேற்கு பாஹாங், பேரா, நெமிரி செம்பிலான் முதலிய இடங்களிலுள்ள சில தோட்ட முதலாளிகள் இந்தியத் தொழிலாளர்கள் 100 சத விகித சம்பள உயர்வுக்கு இணங்கியதுடன், சீனத் தொழிலாளர்களுக்கு 20 சத விகித சம்பளக் குறைப்புத் திட்டத்தையும் புகுத்த மறுத்து விட்டனர். இரண்டொரு இடங்களில் சம்பளக் குறைப்புத் திட்டத்தைக் கொண்டு வராமல் தொழிலாளரிடம் இது விஷயங்களை யாருக்கும் தெரிவிக்க வேண்டாமென்றும் சில முதலாளிகள் கேட்டுக்கொண்டிருக்கின்றனரெனத் தெரிகிறது. ம. ஐ. தோ. முதலாளிகள் சங்கம் அவர்கள் மேல் சீறி விழுகிறது. தங்கள் காலடியில் அவர்களை விழச் செய்வதற்கு வலை விரிக்கப்பார்க்கிறது, இந்த ஜம்பமெல்லாம் இனிமேல் செல்லுமா?

டான்ஸ் ஆட, ஹோட்டலும், உயர்ந்த ரக மது பானவகைகளும், உல்லாசமாகச் செல்வதற்கு மோட்டார்களும், நவீன வசதியுள்ள பங்களாக்களும் தொழிலாளர்கள் வேணுமெ

ன்று கேட்கின்றனர், அவர்கள் கேட்பதெல்லாம் வயிறார உண்ண உணவு, குடியிருக்கக் குச்சு, இவைதானே? இதற்கு முதலாளி வர்க்கம் ஏன் மறுக்க வேண்டுமென்றுதான் கேட்கிறோம். பாட்டாளி மக்களை ஏய்த்து ஏப்பமிட்ட காலம் போதாதா? எத்தனை நாளைக்குத்தான் தொழிலாளர்கள் கெஞ்சிக் கேட்டுக் கொண்டு பொறுத்திருப்பார்கள்? ஒன்றும் பலனில்லையென்று கண்ட பிறகே தங்களின் கடைசி ஆயுதமாகிய வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்குகின்றனர். இதில் ஆச்சர்யப்படத் தக்க விஷயம் எதுவுமில்லை.

ரப்பர் விலை இறங்கிவிட்டது. எப்படிச்சம்பளத்தைக்குறைக்காமல்இருக்கமுடியும் என்று கேட்கின்றனர் தோட்ட முதலாளிகள். சரி. நியாயமென்றே வைத்துக் கொள்வோம். ரப்பர் விலை உயர்ந்திருந்த காலத்தில் கொழுத்த லாபம் கிடைத்த போது எத்தனை சதவிகிதம் தொழிலாளர்களுக்கு அள்ளிக் கொடுத்துவிட்டனரென்று கேட்கிறோம். ஆகவே அந்த லாபத்திலும் தொழிலாளர்களுக்குச் சிறிதளவு கொடுக்க மனமில்லாத முதலாளிகள் இப்போது ரப்பர்விலை இறங்கிவிட்டது என்று லபோ, லபோ என்று வயிற்றிலடித்துக் கொள்வதில் அர்த்தம் என்ன இருக்க முடியும்?''

இந்த 'சோக சித்திரம்'—மலாயாவில்! காவிரி, வைகை, தென்பெண்ணை, என்று கவிவாணர்கள் களிப்புடனும் பெருமையுடனும், எந்தத் தமிழ் நாட்டைப்பற்றிப் பாடினரோ, அங்கிருந்து சென்ற தமிழர்கள், இவ்விதமான அல்லலை அனுபவிக்கிறார்கள். அவர்களின் உடன் பிறந்தோராகிய நாம், அவர்களை மறப்பது, தமிழர் பண்பாகாது. எனவே, மலாய் நாட்டிலுள்ள தமிழர்களின் பக்கம், தாயகம், உறுதியுடன் நிற்கிறது என்பதை உலகறியச் செய்ய முன்வர வேண்டுகிறோம். மலாய் நாட்டிலே, தமிழர்களுக்கு உள்ள நிலையை,

"ஆனையைப் பூனையாக்கி விடுவோம். பூனையை ஆனையாக்கி விடுவோம். கஷ்டமென்பதே தெரியாமல் வாழ்க்கை நடத்தலாம். என்றுபசப்பிக்,கயிறுதிரித்து அந்தக் காலத்தில் இந்தியாவிலிருந்து பாட்டாளி மக்களை ஆடு மாடுகளைப்போல் கப்பலில் போட்டு அடைத்து இந்நாட்டிற்குச்சஞ்சியில்கொண்டுவந்தார்கள் புண்ணியவான்கள்—ஒரு சாண் வயிற்றை நிரப்பப் பெண்டுகளும், குழந்தைகளும், வயோதிகர்களும் இவ்வளவு பாடுபட வேண்டியிருக்கிறது. ஸ்திரீகள் குழந்தைகளைப் பெற்று வளர்த்துப் பராமரிக்க வேண்டிய தங்கள் முழு முதற் கடமையையும் விட்டுவிட்டுப்பனியிலும், மழையிலும், வெயிலிலும் மானத்தைக் காக்கத் தகுந்த வஸ்திரமின்றியும்,நெற்றி வியர்வை நிலத்தில்விழப் பாடு படவேண்டியசிர்ப்பந்தமேற்பட்டுள்ளது. ஆடவர் முடிநரைத்து வயோதிகப் பருவமடைந்தவராயினும் கஷ்டமென்றால் என்னவென்றே தெரியாது வாழ்க்கை நடத்தவேண்டிய இந்தபருவத்திலும் வேலைசெய்ய வேண்டியிருக்கிறது சிறுவர் சிறுமிகளும் கவலையின்றிச் சுதந்திரமாகத் திரிந்து விளையாடிப் பள்ளி செல்ல வேண்டிய பருவத்தில் 20-30 காசுக்குப் புல்வெட்டிக்காலங்கழிக்க வேண்டியிருக்கிறது. இப்படி வேலை செய்யாவிடில் பட்டினி கிடந்துசாக வேண்டியதுதான். கொசுக்கடி, மலேரியா முதலிய பீடைகளுக்குப் பஞ்சமில்லை. காய்ச்சல் கட்டி விழுந்து வயிறு தள்ளி அகாலத்தில் மடிகின்றனர்ஏராளமான பாட்டாளி மக்கள். இவர்கள் விமோசனமடைவதெப்போது? இவர்களுடைய நிலை, அந்தஸ்து உயர்ந்தால்தான் இந்நாட்டிலுள்ள இந்தியர்களைப்பிற சமூகத்தினர் கௌரவிப்பர். ஏனெனில் இந்நாட்டு மக்களில் 100க்கு 80 பேர்கள் ஏழைப்பாட்டாளிகளல்லவா?''

இவ்வண்ணம், 'ஜனநாயகம்' மேலும் வர்ணித்திருக்கிறது.

அங்கு, அவர்கள், இவ்விதம், கொடுமைக்கு ஆளாவது தெரிந்தும், நாம், அவர்களைப்பற்றி அக்கரை காட்டாதிருப்பது, அழகாமா, அறிவாகுமா, அறமாகுமா? வெட்கமும் துக்கமும் சேர்ந்து தாக்கும் நிலை இது. திராவிடத் தோழர்கள், இதனை, நாட்டுக்கு எடுத்துரைத்து, மலாய்த் தமிழர்களின் மானத்தோடு கூடிய வாழ்வுக்காகப் போரிட வேண்டும்.

"நாயினும் கீழாய்ச் சேந்தமிழ்
நாட்டார்
நலிவதை நான்கண்டும்
ஓயுதல் இன்றி அவர் நலம்
எண்ணி
உழைத்திட நான் தவறேன்!"

என்றார் புரட்சிக் கவிஞர்.

நான்!-அவர்,தம்மை மட்டுமல்ல, அந்த வார்த்தை மூலம் குறிப்பது. நம்மை எல்லாம் சேர்த்தே பேசுகிறார்-நமக்காகவேபேசுகிறார்-நாட்டுக்காகப் பேசினார்! நான் தவறேன்! எவ்வளவு உறுதி ஒலிக்கிறது, அந்த வாசகத்தில்! ஆனால், உண்மையிலே மலாயில் வதையும் தமிழர்களைப் பற்றி, இங்கு, தாயகம், பேச்சற்றுக்கிடக்கிறது. இதுசரியா? எண்ணிப் பாருங்கள்.

தொழிலாளர் கிளர்ச்சியை அடக்க, மலாய் சர்க்கார், எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கையின் விளைவாகத், தமிழன்பிணமானான்—குண்டடிபட்டு. கேட்டது வாழ்வு— கிடைத்தது சாவு என்று முன்பு, தீட்டினோம், இங்கு பஞ்சன் சர்க்கார், செங்கொடியினர்மீது தாக்குதல் நடத்தியதைக் கண்டித்து எழுதியபோது. மலாய் சென்றுள்ள தமிழர்களுக்கு, அங்குள்ள நிலையும் இது போலவேதான். வாழ்வுக்கு வழி கேட்டால், சாவுக்கு வழி செய்து தந்தது சர்க்கார். சமாதானம் கூறத்தானு தெரியாது, மலை மலையாக ரிகார்டுகளைக் குவிக்கும் சர்க்காரால்! சட்டத்தை நிலைநாட்டவே, இந்த நடவடிக்கை எடுக்கவேண்டி நேரிட்டது என்று கூறிவிட்டது. தமிழர்கள் துப்பாக்கிக்கு இரையாகும் இந்தத் துயர்மிக்க, செய்திக்கு, இங்கு, பதைப்பு இல்லை, ஆனால் பணம் படைத்தவர்கள், ஆப்பிரிக்காவிலே, 'வீடு வாசல்' வாங்க அனுமதி கிடைக்கவில்லை என்ற உடனே, அகில இந்தியாவிலும் கண்டனப் புயல் வீசிற்று—இன்னமும் புயல் ஓயவில்லை. தமிழர்கள் பிணமாயினர் —ரப்பர் தோட்டக் காடுகளில்! தாயகம், அதனைச் சரியாக அறியவுமில்லை.

மலாய் நாட்டுத் தமிழர்களுக்குத் தக்க நியாயம் கிடைக்கவேண்டுமானால், தாயகம், அவர்களின் நிலைமைக்கூர்ந்து கவனித்து வருகிறது, அவர்களுக்குப்பக்க பலமாக இருக்கிறது, என்று மலாய் சர்க்கார் உணரும்படி நாம் இங்கு, நமது கண்டனக்குரலைக்கிளப்பவேண்டும். அங்கு, கால் கை முறியப்பாடுபடும் தமிழர்கள், நாதியற்றவர்களல்ல, நாடற்றவர்களல்ல, என்பது மலாய் சர்க்காருக்குத் தெரியும்படி செய்யப்பட வேண்டும்.

ஆனால், இதனைச் செய்யவில்லை, நாம். நாடு, பேச்சற்றுக்கிடக்கிறது- ஏன்?...............

7-ம் பக்கத் தொடர்ச்சி

செல்வாக்கிழந்து, தேய்ந்தனர். குமாரராஜாவின் தயவிலே, திராவிட வீரன் T. V. சுப்ரமணியத்தின் உடலம் சுடலைசென்றது. பொதுவாழ்வு, ஈவு இரக்கமற்ற, பலிபீடம். அதிலும், தம்மை மறந்த திராவிடஇனத்துக்குத் தொண்டாற்றும் பொதுவாழ்வு, தமிழகத்திலே, பலதலைவர்களின் 'சொத்துக்களை' காவு வாங்கிவிட்டது. தியாகராயரின் பொதுவாழ்வின் விளைவு, அவருடைய குடும்பத்திலே பிறகு, விளங்கிற்று—வேதனையின் உருவில். இன்று அவர் பெயரால் ஒரு உயர்தரக் கல்லூரி நடத்தும் காரியம், 'தாங்கமுடியாத பாரமாக' இருக்கிறது! நாயரின் குடும்பம்-எங்கே? டாக்டர் நடேசனாரின் கடைசி நாட்கள் எங்ஙனமிருந்தன? பொதுவாழ்வு எனும் பயங்கரப் பலிபீடத்திலே, தமது 'வாழ்வை' பலி கொடுத்தவர்கள் பலர்—சர். சண்முகம்-சர். இராமசாமி-சர். உஸ்மான்-போன்ற ஒருசில, 'விளைவு தெளிவு' தெரிந்த காரியவாதிகள் தவிர.

பெரியாரின் பொதுவாழ்வு, தனி வழி.

இவ்வளவு அதிக காலம் பொதுவாழ்வில் இருந்தும் அவர், பலிபீடத்திலே தமது செல்வத்தைக் காவு கொடுக்கவில்லை என்பது மட்டுமல்ல, பொதுவாழ்வின் முக்யத்துவத்தை, மக்கள்—அதிலும், தெளிவற்றிருந்த நமது மக்களும் உணருமாறு செய்தார். அவரால் மட்டுமே முடிந்தது, வாலிபர்களின் படை திரட்ட! அவருக்கு முன்பு இருந்தோர், வாலிபர் படை திரட்டுவர், —பணம் கொடுத்து. அந்தச் செலவு அவர்தம் சொத்தைக் கொத்தும் கழுகாகிவிடும். பெரியார் நிலை அவ்விதமில்லை. படை கேட்டால் படை! பணம் கேட்டால் பணம்! வாலிபர்கள் தமது உழைப்பை மட்டுமல்ல, வறுமையாளர்களும்கூட, பணம் தமது சக்திக்கேற்ற அளவு, தந்து, எமது விடுதலைப்போர் நடத்துக! என்று வேண்டிக்கொள்ளும், நிலை, பெரியாருக்கு மட்டுமே ஏற்பட்டது.

காங்கிரசில் புகலிடம் தேடி, அதன் பலத்தைக் கொண்டு, திராவிட எழுச்சியை அடக்கிவிட முடியும், என்று ஆரியத் தலைவர்கள் நம்பிக்கை கொண்டதற்குக் காரணம், தூங்கும் திராவிடத்தை எழுப்பி, வீறு கொள்ளச் செய்யும் பெரும்பணியாற்றப் பெருஞ் செல்வம் தேவை, இதனை இழக்க எந்தத் தலைவருக்கு மனம் வரும்! வரினும், எத்தனை தியாகராயர்கள் கிளம்ப முடியும்! சொத்தை இழந்து, வாழ்வு தேய்ந்து போகவும் சம்மதிக்க—எனவே வேறு பலர் கிளம்பமாட்டார்கள்—அந்தப் பயங்கரப் பலிபீடத்துக்கு, மேலும் மேலும் காவு கிடைக்காது, எனவே ஜெயமுண்டு பயமில்லை மனமே என்று எண்ணினர்—ஏமாந்தனர். பெரியார் பெரும் படை திரட்டிக் காட்டினார், பணச் செலவின்றி, பல ஆண்டுகள் பொது வாழ்வை நடத்தமுடியும், தியாகர் போல் செல்வத்தை இழக்காமல், தூங்கும் திராவிடத்தைத் தக்க முறையில் தட்டி எழுப்பினால், அது படை தரும், படைக்குப்பலம்தேடப் பணம் தரும், என்று, செயலில் செய்து காட்டினார்.

திராவிடத்திலே இதுவரை பணி புரிந்த தலைவர்களுக்கும் பெரியாருக்கும் உள்ள மகத்தான வித்யாசங்களில் இதுவொன்றாகும். இந்தத் திறனறிந்து பணி புரியும் பெரியாரை, ஆரியம், தியாகரைத் தீர்த்துக் கட்டியதுபோலச் செய்யமுடியாது. போர் நிற்காது—கருவிக்கும் பஞ்சமில்லை.

துவக்க நாட்களிலே, ஒரே ஒரு இதழ், குடி அரசு. அதைப் படிக்கவே பயப்படுவர், படித்தோர் பதறுவர்—அது நாட்டிலே பரவவொட்டாதபடி பல சதிச் செயல்கள் நடைபெற்றன. இந்த ஒரு இதழ், என்ன செய்யமுடியும் என்று பேசி இறுமாந்தனர், எண்ணற்ற பல பத்திரிகைகள் தங்கள் பக்கபலமாக உள்ளன என்ற தைரியத்திலே. அவர்கள் கண் திறந்து பார்க்கட்டும்—இந்த வாரம், பெரியாரின் பெருந்தொண்டின் சிறப்பினை விளக்குவது, ஒரு குடி அரசு மட்டுமா! அல்ல! அல்ல! ஆரியம் எதிர்பார்த்திருக்கவே முடியாது — நாமேகூடச் சில ஆண்டுகளுக்கு முன்பு நினைத்திருக்க முடியாது—அவ்வளவு இதழ்கள்—அழகான வடிவு—ஆர்வமிக்க இளைஞர்களின் எழுத்தோவியங்கள். அவ்வளவு இதழ்களும் இன்று திராவிட இன முரசு! ஜஸ்டிஸ் தலைவர்களின் முறைக்கும் இதற்கும் நேர் மாறு. ஒரு ஜஸ்டிஸ் இதழ், எத்தனை மந்திரிகளின் பணத்தைச் சாப்பிட்டு ஏப்பம் விட்டு, அஜீரணத்தாலேயே இறந்துபட்டது! ஒரு திராவிடன், ஓடி ஆடிப் பாடுபட்டு, இறந்துவிட்டது. ஆனால் இன்று!!

இதோ மகிழ்ச்சியும் பெருமையும் தரக்கூடிய அட்டவணை:—

தீப்பொறி (வேலூர்)
திராவிட அரசு
திராவிட முரசு
போர் வாள்
திராவிடன்
பூந்தோட்டம்
தோழன்
அழகு
கதிரவன்
டார்பிடோ
இன ஒலி
தீப்பொறி (சென்னை)
மறுமலர்ச்சி
பொன்னி
குயில் (மாதம்)
குயில் (வாரம்)
குயில் (கவிதை)
தமிழ்நாடு (சென்னை)
நிலவு
மயில்
திராவிட மணி
சூறாவளி
புது வாழ்வு
ஸ்பார்க் (ஆங்கிலம்)
நியூ ஜஸ்டிஸ் (ஆங்கிலம்)
தமிழகம்
திராவிடம்
நகர தூதன்
சண்டே அப்சர்வர் (ஆங்கிலம்)
லிபரேடர் (ஆங்கிலம்)
கோவை முரசு
சேலம் டைம்ஸ்
வழிகாட்டி
சமத்துவம்
சமரசம்
தமிழ் ஏடு
குரல்
விடுதலை
குடி அரசு
ஜஸ்டிசைட்
திராவிட நாடு

வளர்ந்து விட்டன! வளர்ந்து கொண்டே உள்ளன! வளரும் வளம் திராவிடத்துக்கு ஏற்பட்டுவிட்டது.

(12-ம் பக்கம் பார்க்க)

6-ம் பக்கத் தொடர்ச்சி

வேண்டியிருக்கிறதாம். குதிரைப் பந்தயம் மூலம் சர்க்காருக்கு நிறைய வருமானம்கிடைக்கிறதாம். அதனால் அதை எப்படி விடமுடியும் என்று கேட்கிறார் டாக்டர் சுப்பராயன். பசுவைக்கொன்று செருப்புத்தானம் செய்வதற்கும் இதற்கும் என்ன வித்யாசம்? வசதியுள்ள சிலர் இதில் பணத்தை இழக்கிறார்களென்பதைத் தவிர எவ்வளவு ஏழைக்குடும்பங்கள் இதன் மூலம் பாழாய்ப்போகின்றனவென்பது சர்க்காருக்குத் தெரியாதா? குதிரைப்பந்தயம் ஒருசூதாட்டம் என்பதை யாரும் மறுக்க முடியாது.”

“காங்கிரஸ்காரர்களுக்குஇதுநல்ல சந்தர்ப்பம். அரசியல் போராட்டத்திற்காகச்சேவைசெய்த ஊழியர்கள் தமது கவனத்தைக் குதிரைப்பந்தய ஒழிப்பில் செலுத்திச் சர்க்காரைப் பணியவைக்கலாம். சென்னை மாகாண காங்கிரஸ் ஊழியர்கள் சென்னைக்கு வந்து குதிரைப் பந்தய மைதானத்தின் முன்பு மறியல் செய்யவேண்டுமென்று யோசனை கூறுகிறோம். பிரிட்டிஷ் அதிகாரவர்க்கத்தின் தடியடிகளுக்கு இலக்கான ஊழியர்கள் இன்று காங்கிரஸ் மந்திரி சபையின் தடியடிக்குப் பயப்படப் போகிறார்களா? நாம் வாய் வேதாந்தம் பேசவில்லை. இன்னும் இரண்டு மாதம் இருக்கிறது. குதிரைப்பந்தய மறியலுக்குப்படைசேர்ந்தால்நானும் அவர்களுடன் வரத்தயாராய் இருக்கிறேன். ஊழியர்கள் இதைச் செய்வார்களா?”

“நல்லகாரியத்திற்குநூறு தொண்டர்கள் தயாராகிவிட்டார்கள். குதிரைப் பந்தயத்தை ஒழித்துத்தானாக வேண்டும் என்று சென்ற வாரம் எழுதியிருந்தேனல்லவா? அவசியமானால் அதற்காக ஒரு சத்யாக்ரஹப் போராட்டமும் நடத்த வேண்டும் என்று யோசனை கூறியிருந்தேன். இந்த யோசனை காட்டுத் தீயைப் போல் பிடித்துக் கொண்டுவிட்டது. சென்ற இரண்டு நாட்களாக வரும் கடிதங்களைப் பார்த்தால் நல்ல காரியத்திற்கு உழைப்பதற்காகத் தமிழ் நாட்டில் நூற்றுக்கணக்கான ஊழியர்கள் தயாராய் இருக்கிறார்களென்பது ருசுவாகிறது.”

“குதிரைப் பந்தய போராட்டத்தைநடத்துவதற்காகச்சென்னையிலேயே ஒரு கமிட்டி அமைக்க ஏற்பாடுகள் நடைபெறுவதாக அறிகிறேன். எடுத்தவுடன் போராட்டம் என்பது சத்யாக்ரஹத்தின் அடிப்படைக்கே முரணானது. கமிட்டியை அமைத்துச் சென்னை சர்க்காரிடம் ஒரு தூதுக் கோஷ்டியை அனுப்ப வேண்டும். பொதுஜன அபிப்ராயம் குதிரைப் பந்தயத்தை எவ்வளவு வெறுக்கிறது என்பதைச் சர்க்கார் மனதில் படும்படியாக எடுத்துச் சொல்ல வேண்டும். பணமுள்ளவர்களுக்குக் குதிரைப் பந்தயம் ஒரு பொழுது போக்காக இருந்தாலும், எவ்வளவு ஏழைகளை அது பாழாக்குகிறது என்பதையும் அவர்களிடம் வற்புறுத்த வேண்டும். அதற்கும் அவர்கள் செவிசாய்க்கவில்லையென்றால் பிறகுதான் போராட்டம் நடத்தலாம்.”

“மதுவிலக்குநஷ்டத்தைஈடு செய்வதற்காகக் குதிரைப் பந்தயத்தை அனுமதிக்கிறோம் என்று டாக்டர் சுப்பராயன் சொல்லுவது பரிகசிக்கத் தகுந்தது. இதிலிருந்து சர்க்காருக்கு எவ்வளவு கிடைக்கும்? இந்த வருஷம் சுமார் 23-லட்சம்கிடைக்குமென்று மதிப்பிடுகிறார்கள். ‘23 லட்சத்தை ஒரு மாகாண சர்க்கார் ஒரு வருமான இனம் என்று சொல்லுவதாயிருந்தால் அதைவிடக் கேலிக்கூத்து வேறு எதுவும் இருக்க முடியாது. உண்மை அதுவல்ல. டாக்டர் சுப்பராயனுக்குக் குதிரைப் பந்தயம் பிடிக்கும்என்பதுதான் உண்மை.”

“அவருடைய சொந்த அபிப்பிராயத்திற்காக வருஷாவருஷம் ஆயிரக்கணக்கானவர்கள் ஓட்டாண்டிகளாக வேண்டுமா? குடித்தால் தான் சுறுசுறுப்பாய் வேலைசெய்ய முடிகிறது என்று குடிகாரர்கள் சொல்லுகிறார்கள். அதற்காக அதை அனுமதிக்க முடியுமா? வருமானம் கிடைக்கிறது என்பதற்காகத்தீமையைஅனுமதிக்க முடியுமா? விபசார விடுதிகளுக்கு வரிபோட்டால் கூடத்தான் வருமானம் கிடைக்கும். அதற்காக அதை அனுமதிக்க முடியுமா?”

“ஊழியர்களுக்குஒருவார்த்தை. ரேஸ் ஒழியவேண்டும் என்பதில் சந்தேகமே இல்லை. ஆனால், ஊழியர்கள் தனித்தனியாக அவசரப்பட்டு எதுவும் செய்யக்கூடாது. சென்னை கமிட்டியின் அறிக்கைக்குப் பிறகுதான் அவர்கள் எதுவும் செய்ய வேண்டும். தொண்டர்களைச் சேர்த்துக் கொள்ளுவதில் தவறில்லை. ஆனால், கட்டுப்பாடாகத்தான் எதுவும் செய்ய வேண்டும். அத்துடன் எல்லாக் காங்கிரஸ் கமிட்டி களிலும் குதிரைப்பந்தய ஒழிப்பை வற்புறுத்தித் தீர்மானங்கள் நிறைவேற்ற வேண்டும். அதற்கும் ஏற்பாடு செய்யுங்கள்.” இவ்வளவும் பாரததேவியில் காணப்படும் வாசகங்கள்.

குதிரைப் பந்தயம் ஒழிக்கப்பட வேண்டுமெனும் விருப்பமுடையவர்கள் காங்கிரஸ் கட்சியில் இருப்பது போலவே, மற்றக் கட்சிகளிலும் உள்ளனர். அமைச்சர் சுப்பராயன் போன்றாரும் உண்டு. மக்களுக்குக் கேடு செய்யும் கொள்கையை எவர் கையாண்டபோதிலும் அது அழிக்கப்படவேண்டும் எனும் கோட்பாடு கட்சிப் பற்றுதலுக்குப் புறம்பானதாகும். எழுத்தளவோடு எதிர்ப்பை நிறுத்திக்கொள்ளாமல், செயலளவிலும் இறங்கிக் குதிரைப் பந்தயத்தைத் தடுப்பதை நாம் மனமார வரவேற்கிறோம். இதற்கான ஒத்துழைப்பைத்தரத், தோளோடுதோள்கோர்த்துப் போராடத் திராவிடத் தோழர்கள் பலர் துடித்துக் கொண்டுள்ளனர். போரினால் ஏற்படும் இன்னல் பலவற்றையும், ஏற்கும் நெஞ்சுறுதியுடையவர்கள் அவர்கள். களத்திலே உயிர்விடவும் அவர்கள் பின்னடையார். எனவே பிரஸ்தாப விஷயத்தை ஒரு கட்சியின் சொந்த விஷயமாகக் கருதாமல், சகல கட்சியினரும் பங்குகொள்ளும் முறையில் போராட்டக் குழு அமைக்கப்பட வேண்டும். மக்கள் நலம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டுள்ளவர்கள் செய்யவேண்டியதும் இதுவேயாகும்.

## புதிய செய்தி ஸ்தாபனம்

புதியதோர் செய்தி ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது, வெளிநாட்டு விஷயங்களை நல்ல முறையில் பாரபட்சமின்றி நமக்கு அளிப்பதற்காக. மூலதனம் 25 லட்சம் ரூபாய். பங்கு ஒன்றுக்கு ரூ. 100 வீதம் 25 ஆயிரம் பங்குகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. 5 லட்ச ரூபாய்க்கே பங்குகள் கோரப்பட்டிருக்கின்றன.

செய்திப் பத்திரிகைகளுக்கே பங்குகள் வாங்கும் உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. சிலரோ பலரோ கூட்டாக ஆதிக்கம் பெறுவதைத் தடுப்பதற்காக, ஒரு அங்கத்தவர் 250 பங்குகளுக்குமேல் வாங்கக்கூடாது எனத் தடைசெய்யப்பட்டிருக்கிறது. இதன் முதல் நிர்வாகக் குழு, முக்கிய மாகாணங்களின் பத்திரிகைக்காரர்களைக் கொண்டதாக இருக்கும்.

10-ம் பக்கத் தொடர்ச்சி

எனவே இவ்வாண்டு, பெரியார் வாரம், நமக்கு மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் தருவதாக அமைகிறது.

சென்ற ஆண்டு, பெரியாரின் சிறப்பினை விளக்கியபோது எடுத்துக் காட்டியது போன்றே, இதுபோதும் கூறுகிறேம், பெரியார் பெற்றுள்ள வெற்றி பெரும் அளவினது. குறிக்கோளற்றுக் கிடந்த 'திராவிடத்துக்குத் தக்கதோர் குறிக்கோளைக் காட்டும், அரியகாரியத்தை அவர்செய்து முடித்துவிட்டார்—நமது வணக்கம் அவருக்கு. சுரங்கத்திலிருந்து தங்கப் பாளங்களை வெளியே கொண்டு வந்தாகி விட்டது. ஆம்! இனி, அணி பணி செய்யும் காரியம் இருக்கிறது. அதனைச் செய்யும்படி, வழி வகுத்துத்தரும் வேலைதான் பெரியாருக்கு. பெரியாருக்குக் கிடைத்திருப்பது போன்ற ஆர்வமிக்க இளைஞர்கள், திராவிடத் தலைவர்களிலே வேறு யாருக்கும் கிடைத்ததில்லை. "இப்படை தோற்கின், எப்படை ஜெயிக்கும்?" என்று, மனோன்மணிய ஆசிரியர் கூறியதுபோல, பெரியார், நம்பிக்கையுடன் கூறலாம்—கூறவேண்டும். தமது பெரும் படையினை, இங்கு செல்! இதைச் செய்! என்றுகூறி, அப்படைபெரும் வெற்றி கண்டு மகிழ வேண்டும். வயது 69! வாலிப வீரர்கள் பலப் பல ஆயிரம் அவரைச் சுற்றி! அவருக்கு இனியும், ஓயாத உழைப்பா! அவருடைய பெரும் படைக்கு, அவர், பொறுப்பும் ஆசியும் அளித்து, அனுப்பவேண்டும் இன்னின்ன செயலைப்புரி என்று.

திராவிட நாட்டின் விடுதலைக்காகச் செய்யப்பட வேண்டியது இன்னின்ன வகை என்று கூறி, யாருக்கும் இது நாள்வரை கிடைத்திராத, தன்னலமற்ற திராவிடப் படையினருக்கு, வேலைகளைப் பெரியார், பகிர்ந்தளித்துவிட்டு, "பாரீர், என்படை புரியும் செயலே!" என்று பெருமிதத்துடன் கூறலாம்.

இதுவரை, வெற்றிபல கண்ட, வீரத்தலைவருக்கு, வாழ்க பெரியார்—என்று வணக்கம் கூறி, இதை முடிக்கிறேம்.

✲

## "நீதிதேவன் மயக்கம்"

—

வாலாஜாபாத், உயர்நிலைப்பள்ளி அமைப்பு நிதிக்காக, ராஜாடாகீஸ் உரிமையாளர் தோழர் தேவராஜன் அவர்கள் ஏற்பாடு செய்த, நன்கொடைநாடகம், மேற்படி டாகீசில், 20ந்தேதி இரவு, 'நீதிதேவன் மயக்கம்' நடைபெற்றது. பூம்பாவைபுகழ் K. R. இராமசாமிதலைமைவகித்தார். நகைச்சுவை அரசர் தோழர் N. S. கிருஷ்ணன் அவர்களும், தோழர் நெடுஞ்செழியன் அவர்களும், நாடகத்தையும், நன்கொடை முயற்சியையும் பாராட்டிப் பேசினர். மேற்படி நாடகத்தின் மூலம், பள்ளிக்கூட நிதிக்குச் சுமார் மூவாயிரம் ரூபாய் கிடைத்ததற்காக, தோழர் தேவராசனரும் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் தோழர் அ. மு. பரமசிவானந்தம் அவர்களும் நன்றி கூறினர். வாலாஜாபாத்தில் இப்போது, இரண்டு பள்ளிக்கூடங்கள் உள்ளன. அதிலொன்று வாலாஜாபாத் இந்துமத பாடசாலை. நன்கொடை நாடகம், மற்றொரு பள்ளிக்கூடமான, வாலாஜாபாத் உயர்நிலைப்பள்ளிக்காக நடைபெற்றது. இங்கு, உயர்நிலை வகுப்புகள் அமைகக் சர்க்கார் அனுமதி அளித்திருக்கிறது. கட்டட வேலைக்காகவும், நடைமுறைச் செலவுக்கும், நிதி திரட்டும் பொறுப்பை, ராஜாடாகீஸ் உரிமையாளர் தேவராசனர் ஏற்றுக் கொண்டுள்ளார். அவருடைய அரிய முயற்சிக்கு ஆக்கம் தரும் முறையிலேயே, வாலாஜாபாத் திராவிடர் கழகம், மேற்படி நாடகத்தை ஏற்பாடு செய்தது.

## அண்ணுமலைப் பல்கலைக்கழகம்

—

அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின், தமிழ்ப்பேரவையின் தொடக்க விழா, 23-ந்தேதி மாலை, விமரிசையாக நடைபெற்றது. தோழர் அண்ணத்துரை, நிலையும் நினைப்பும் எனும் தலைப்பில் பேசினர். தோழர் மதியழகன் தலைமை தாங்கினர். அன்றிரவு பேரவையினர் விருந்து நடைபெற்றது. இரவு 9-மணிக்குமேல், சிதம்பரம் அம்புஜவல்லி அம்மையாரின் (பல்கலைக்கழக மாணவி) இன்னிசை நடைபெற்றது.

—

## பிறப்பு.

—

தஞ்சையிலுள்ள கிருஷ்ணன் நாடக சபாவின் உரிமையாளர் தோழர் K. R. இராமசாமி அவர்களுக்கு 21-9-47ல் ஒரு ஆண் குழந்தை பிறந்து தாயும் சேயும் நலமே உள்ளனர்.

* * *

காஞ்சிபுரம் தோழர் M. சாமிநாதன் அவர்களுக்கு 18-9-47ல் ஒரு ஆண் மகவு பிறந்து தாயும் சேயும் நலமே உள்ளனர்.

* * *

சென்னைத் தோழர் சத்தியவாணி முத்து அவர்களுக்கு 21—9—47 ல் ஒரு ஆண் குழந்தை பிறந்து தாயும் சேயும் நலம்.

* * *

தஞ்சை கிருஷ்ணன் நாடக சபா மானேஜர் தோழர் . P. N. எதிராஜ் அவர்களுக்கு 20-9-47ல் ஒரு ஆண் குழந்தை பிறந்து தாயும் சேயும் நலமேயுள்ளனர்.

✲

## அறிவிப்பு.

—

"திராவிட நாடு" அலுவலகத்திற்குக் கடிதங்கள் எழுதும் அன்பர்கள் கீழ்க்கண்டபடி விலாசமிட்டு எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1. கட்டுரை — கதை — பாடல் முதலியன எழுதுவோர் கவரின் மேல்பக்கத்தில் அதனுள் இருக்கும் விஷயத்தைக் குறிப்பிட்டு, ஆசிரியர், "திராவிட நாடு" என்று விலாசமிட வேண்டும்.

2. ஏஜண்டுத் தோழர்களும் சந்தாதாரர்களும், விளம்பரம் அனுப்புவோரும் மானேஜர் திராவிடநாடு என்று விலாசமிட்டு எழுத வேண்டும்.

3. ஆசிரியருக்குத் தனிப்பட்ட முறையில் எழுதப்படும் கடிதங்கள் மட்டும் C. N. அண்ணத்துரை என்று விலாசமிட்டு எழுதவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

மானேஜர்.

# சிறந்த நண்பர்—சிதைந்த வாழ்வு

★

ஆதிக்கம் செலுத்த விரும்பும்ஆசிரியர்களுக்கு ஒருபுயல்! மாணவர்களுக்கு ஓர் தென்றல்! பழகும் போதே, இனி என்றும் இவரை மறத்தல் முடியாத காரியம் என்ற எண்ணத்தை மனதிலே பதியச் செய்துவிடும், பேச்சு!

நான் ஓர்புரட்சிச்சின்னம்!எங்கோ இருக்கவேண்டிய என்னை இந்தக்கட்டுக்குள் கொண்டுவந்து போட்டுவிட்டனர்—நானே, என்று இந்தக் கூண்டைவிட்டு வெளி ஏறுவது என்று துடி துடித்தபடியே இருக்கிறேன் — என்று கூறும் விதமாக அமைந்த பார்வை. கருப்புநிறம்! ஒழுங்குபடுத்தப்படாத, ஆனால் மேனாட்டுமுறையான உடை!

உள்ளமெல்லாம், பார்ப்பனரல்லாதாரின்முன்னேற்றத்தைக்குறித்த அக்கரை! இடிமுழக்கம்போன்ற சிரிப்பு—கண்டிக்கத் தொடங்கினால், காரம்!

வேடிக்கையில் இறங்கினால், சிறு பிள்ளையின் நிலை!

இப்படி, இருபதாண்டுகள், எண்ணற்றவாலிபர்களின் கண்களுக்குக் காட்சியாய், தோழனாய், இருந்து வந்த, ஆசிரியர் வரதராஜன், காலமானார் என்ற செய்தி, அவருடன் பழகும்வாய்ப்புப்பெற்றிருந்த யாருக்கும், திடுக்கிடக்கூடியசெய்தியாகவே இருந்திருக்கும்.

பிரம்பும் கையுமாக இருந்த ஆசிரியர்களைக்கண்டு கண்டுபழகிய, என் கண்களுக்கு, ஆசிரியர் வரதராஜனின், கரம், என் முதுகைத்தட்டிக் கொடுத்தபடி, பச்சையப்பன் பழைய கல்லூரி மாடித் தாழ்வாரத்திலே, அன்றோர் நாள் உலவிய காட்சி, புதுமையாக இருந்தது. கல்லூரியிலே நான் நுழைந்த நாட்கள் ஆசிரியர்களின் "தோழமை" மாணவர்களுக்குக் கிடைக்கக்கூடும் என்ற எண்ணமே எழமுடியாத நாட்கள்.

வரதராஜன்—அப்போது ஆசிரியராகவுமிருந்தார் — மாணவராகவுமிருந்தார். பச்சையப்பன் கல்லூரியில் ஆசிரியர் — சென்னை சட்டக் கல்லூரியிலே மாணவர்!

இந்தஇருநிலைமட்டுமல்ல. சென்னை நகர பார்ப்பனரல்லாத இளைஞர்களுக்குத்தலைவர்! சர். A. இராமசாமி முதலியாரின், எலக்ஷன் இலாக்காவின் தலைவர்! இதுமட்டுமல்ல; தெருக்கோடிக்கூச்சலிடுவோன், தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் கல்வீசுவோன், இருட்டில் நின்று அடித்துவிட்டு ஓடுபவன்போன்ற இந்த ரகங்களுக்கு, இவர் ஓர் அபாய அறிகுறி.

நூறு, இருநூறு, ஐந்நூறு,என்ற அளவில், சைகிள்கள் கிளம்பும், (Vote for Justice) என்ற முழக்கத்துடன். ஒழுங்கான உடையுடன், மாணவர்கள் அவ்விதம் முழக்கம் செய்வர். யார் அவர்கள்? எல்லாம், வரதராஜனின் ஆட்கள் (?) அல்ல, நண்பர்கள்!



இத்தனை காரியங்களையும் கவனித்துக்கொண்டு, கல்லூரியிலும், சில பேராசிரியர்களால் அடக்கமுடியாத வகுப்புகளிலும், அவர் அநாயாசமாக ஆட்சி செய்வார்.

அவருடைய 'வகுப்பு' நடைபெறும்போது, மாணவர் முகமெல்லாம் மலர்ந்து இருக்கும் — அவருடைய அரிய இலக்கியச் செறிவு கண்டோ, பாட நுட்ப விளக்கத்தைக்கேட்டோ அல்ல, அவருடைய உலக விஷய விளக்கம் கேட்டு.

இளைஞர் என்ற நிலையிலேயே இத்தனைப்பொறுப்புகளைத் தாங்கியதால், அவருடைய வாழ்வு வளைந்தேவிட்டது. அதை அவர் உணருவதற்குள், அந்த வளைவு நிமிர்த்தமுடியாத நிலை அடைந்துவிட்டது.

வரதராஜன்-கார்ப்பரேஷன் செல்வார்-சட்டசபை செல்வார்-மந்திரி|மாகக்கூடும் என்றுதான் அந்த நாட்களிலே பலரும் பேசினர். ஆனால் அவர் கடைசிவரை, அந்தக்கல்லூரியிலேயேதான் அடைபட்டுப்போனார். பயன்படுத்தாத காரணத்தால் பாழான பண்டம் போலாகிவிட்டது அவருடைய வாழ்வு— அவருடைய சொந்த நன்மையைப் பொறுத்தமட்டில். ஆனால், பார்ப்பனரல்லாதார் இயக்கமோ, அவரால் பெரும் பயன் பெற்றது.

வகுப்பிலே அமர்ந்திருக்கும் போதே, வலைவீசுவார்-யாரார்,இயக்கத்துக்குப் பயன்படக்கூடியவர்கள் என்று கண்டறிந்து. பத்து,இருபது நாட்களில், அந்த மாணவன், வரதராஜனின் கோஷ்டியிலே சேர்ந்தே விடுவான்.

விரும்பத்தகாத சூழ்நிலை மிகுந்திருந்த ஓர்தெரு-அங்கு ஒருகுதிரைக் கொட்டில்-அதன் மேல்மாடியிலே, சிதறிய புத்தகங்கள், சில செல்லரித்துமிருக்கும், கண்டால் தூக்கிக் குப்பையில் எறியலாம் என்றுதோன்றக்கூடியபடுக்கை, தினசரிக்குவியல். ஈமொய்த்துக்கொண்டிருக்கும் தின்பண்டமிச்சம், இவைகளுக்கிடையே அந்தக்கருப்புவீரர்அவரைச் சூழ்ந்தபடி மாணவர்கள் — அவர்களிலே, நான் முன்னணியில். திட்டங்களோ, மகாப்பிரமாதமாக இருக்கும்! அடிக்கொருதடவை, தேநீர்-சிகரட்புகை, அந்த அறையின் வாடையைஅதிகப்படுத்தும்! நகரைப் பொறுத்த பல முக்கியமான அரசியல் காரியங்கள், இந்தச் சிறியஅறையிலேதான்முடிவு செய்யப்படும். பிறகு அவை, கார்ப்பரேஷனில், சட்டசபையிலேயும், நடமாடியதுண்டு.

என்,பொதுவாழ்க்கைக்குப்போதகாசிரியராக அமைந்த இரட்டையரில், வரதராஜனார் ஒருவர், மற்றவர் திருவேங்கடசாமி. இன்று, அந்தோ, இருவரும் இல்லை. இருவரும் எய்தவேண்டிய நிலையையும் எய்தா முன்பே, இறந்துபட்டனர்.

ஆசிரியர் வரதராஜன், சிலஆண்டுகளாக, ஓரளவு சலிப்பு மனப்பான்மையையும்கொண்டுவிட்டார். அதற்குக்காரணம், பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் பெருந்தலைவர்களில் சிலர், செய்த சுயநலமேயாகும். நாளைக்கொரு முறையேனும் 'நண்பர் வரதராஜனைக்' காணவிட்டால் களிப்பு ஏற்படுவதில்லை என்று கூறி வந்த சாதாரண இராமசாமி, சர்.

(2-ம் பக்கம் பார்க்க)

4-ம் பக்கத் தொடர்ச்சி

கொடுக்கவும் மாட்டார்கள்.

இனி, ஒருவேளை, திருமணமாகாத பார்ப்பன இளைஞர்கள் மேற்குறித்தபடி தருப்பைப்புல்லினால் அரைஞாணும், பூணூலில் மான்தோலும், கோவணஉடையும் கொள்வதில்லை. இச்சொல்லப்பட்டஅடையாளங்கள் எல்லாம், பிறந்து இறக்கும்வரையில் திருமணம் செய்துகொள்ளாமல் இருக்கும் பார்ப்பனருக்குமட்டுமே உரிய அடையாளங்கள் என்று சிலர் சொல்லக்கூடும். அதாவது, ஆரிய முறைப்படி, அவர்களால் மேற்கொள்ளப்படுவதாகச் சொல்லப்படும், பிரமசாரி — கிரகஸ்தன்— வானப்பிரஸ்தன்—சந்நியாசி என்ற நான்கு பிரிவினருள், பிரமசாரியால் கையாளப்படும் முறையே இது என்று கூறுவர். ஒருகால், அந்தவழக்கம், ஆரிய மரபுப்படி அவர்களால் மேற்கொள்ளப்படுவது உண்மையாக இருந்தபோதிலும், அதனை ஒரு தமிழன்—தமிழ்மக்களுக்காக எழுதப்பட்டதாகச் சொல்லப்படும் ஒரு தமிழ்நூலில் எழுதி, அதனைத் தமிழ் மக்கள் படித்து அதன்படி ஒழுக வேண்டுமென்று கூறுவது, தமிழர் பண்பையே மாய்க்கும் ஒரு சதிச் செயலாகும். தமிழ்மக்களுக்கென்றே எழுதப்பட்டதாகச் சொல்லப்படும் ஒரு நூலில், எடுத்தற்கெல்லாம்பார்ப்பனரையும், அவர் தம் ஒழுக்க வழக்கங்களையுமே முன்னிலைப் படுத்தி எழுதிவிட்டு, அதனைத் தமிழ்மக்களுக்குரியநூல்என்று கூறுவதுகுறைமதிபடைத்த குளறு படையினர்கூற்றாகுமேயன்றிச், சிறிதளவு அறிவு படைத்தவராலும், அந்நூலும்— அதிற்பேசப்படும் கருத்துக்களும் தமிழ்மக்களுக்குரியன என்று ஒப்புக்கொள்ளப்படமாட்டா என்பது ஒரு தலை.

இனி, ஆரிய முறையான பிரமசாரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்று சொல்லப்படும் நான்கு நிலைகளும் வரிசை முறையாக, அதாவது முதலில் பிரமசாரியத்தையும், பின்னர் கிருகஸ்தத்தையும், அதன்பின்னர் வானப்பிரஸ்தத்தையும் கடைசியாகச் சந்நியாசத்தையும் ஒருவன் மேற்கொள்வதென்று ஒரு சாராரும்; அங்ஙனமன்றிப், பிரமசாரியத்தை மேற்கொண்டவன் கடைசிவரை பிரமசாரியத்தையேகடைப்பிடித்தொழுக வேண்டும், அதுபோலவே கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் ஆகியவற்றை மேற்கொள்பவர்களும் அவரவர்கள் மேற்கொண்ட நிலைகளிலேயே கடைசிவரை நிற்கவேண்டுமென்று வேறு சிலரும் கூறுகின்றனர். எது எப்படி இருந்தபோதிலும், மேற்சொல்லப்பட்ட நான்கு நிலைகளும் முற்றிலும் தமிழர் பண்புக்கு மாறுபட்டவை என்பதோடு, அவை தமிழ் மக்களின் உள்ளத்தில் இடம் பெறக்கூடாதகேடுகளுமாகும் என்று கடிந்தொதுக்கற்பாலனவாம்.

எனவே, அமர்நீதியிடம் வந்த சிவன், தம்மை ஒரு பார்ப்பன வடிவமாக்கிக்கொண்டுவந்ததோடு, மேலும் அதனை நன்கு வலியுறுத்தும் முறையில் தாம் தாங்கிவந்த தண்டில் ஒரு கட்டுத்தருப்பைப் புல்லையும் கட்டிக் கொண்டு வந்ததானது, ஒருவேளை, அந்த வடிவத்தைக் காண்போர், இது பார்ப்பன வடிவமோ அன்றி வேறு இனத்தைக்குறிக்கும் வடிவமோ என்று எழும் ஐயப்பாட்டினுக்குஒரு சிறிதும் இடம் அளித்தல் கூடாது; "நாம் கொண்டது பார்ப்பன வடிவமே! யாதாயினும் ஐயம் எழுந்தால், இதோ என் தண்டில் கட்டப் பெற்றிருக்கும் தருப்பைப்புல்லைப் பார்த்து, நான் ஒரு பார்ப்பனனே என்பதை உறுதிப்படுத்துங்கள்" என்று கூறும் முறையிலேயே அவ்வடிவத்தைச் சிவன் அமைத்துக் கொண்டார் என்பது சிறிதும் ஐயுறவுக்கு இடமின்றித் தெளிவுபடுத்தப் பட்டுள்ளது. இல்லையேல், திதி-திவசம்—தருப்பணம் ஆகியவற்றிற்குப் பயன்படுத்தப்படும் தருப்பைப்புல்லை, அமர்நீதியின் அன்பைச் சோதிக்க வந்த சிவன் ஏன் கொண்டுவருதல் வேண்டும்? தருப்பைப் புல்லுக்கும் அமர்நீதியின் அன்புக்கும் என்ன தொடர்பு? தருப்பைப்புல், ஒருவருடைய அன்பை அளந்து பார்க்கும் கருவியா? ஒருவேளை அப்படியுமிருக்கலாம்; யார்கண்டார் அதன் பெருமையை!

இனி, அமர்நீதி, தம்பால்அணைந்த பிரமசாரியைக் கண்டவுடன், இதுவரை எவரும் இப்படிப்பட்ட வடிவத்தில், அதாவது கோவணாண்டியாக வந்ததில்லையே! நீர் இந்த வடிவத்தில் இங்கு வந்தகாரணம் என்ன என்று கேட்கும் முறையில்,

"இம்மடத்தினிற் காணும்படி
இலாத நீர்.........."

என்று கேட்கிறார். அமர்நீதி நாயனார் இப்படிக்கேட்டது, அவர்காலம் தமிழ் நாட்டில், கோவணாண்டிக்கோலத்தில் உலகை ஏமாற்றும் ஆரிய நாகரிகம் பரவாத காலமென்பதை நன்கு வலியுறுத்துகின்றது. அமர்நீதி, "இம்மடத்திற் காணும்படி இலாத நீர்" என்று கேட்டதை ஊன்றி நோக்கும்போது, அக்காலத்துத்தமிழ் மக்களின் நாகரிகத்தின் சிறப்பு எவ்வளவு உயர்ந்த நிலையை அடைந்திருந்ததென்பது நன்கு தெளிவாகின்றது. கோவணம் ஒன்றைமட்டுமே தம்முடைய ஆடையாகக் கொண்டுள்ள தமிழ் மக்கள் அக்காலத்தில் இல்லாத காரணத்தாலேயே, அந்தக் கோவணாண்டியைக்கண்டவுடன் அமர்நீதி வியப்படைந்து, "இதுவரை காணும்படி வாராதநீர்" என்று கேட்டிருக்கிறார்.

இனி, அமர்நீதி, தம்முடைய செல்வத்தின்பெரும்பகுதியை ஆடையில்லாதவர்களுக்கு ஆடை வாங்கிக் கொடுப்பதில் செலவு செய்வதையே தம்முடையகுறிக்கோளாகக் கொண்டிருந்தபோதிலும், அவரிடம் வந்து ஆடை வாங்கிச் சென்றவர்களில்ஒருவரேனும் கோவணத்தைமட்டும் கட்டிக்கொண்டு அவரிடம் அதுவரை வந்ததில்லை என்பதையும், உலகிற்கு நல்ல நாகரிகத்தையும் சிறந்த ஒழுக்கத்தையும் கற்றுக் கொடுப்பவராகச் சொல்லப்படும் சிவனே முதன் முதலாக இந்த நாகரிகமற்ற வழக்கத்தை நாட்டவர் முன் கொண்டு வந்துஅறிமுகப்படுத்தி வைத்தார் என்பதும் தெளிவாகத தெரியக் கிடக்கின்றது.

இனித், தமிழ் மக்களின் உயர்ந்த பண்புகளில் முதல் வரிசையில் நிற்கும் சமத்துவம் அதாவது மக்களுக்குள் உயர்வு தாழ்வற்ற நிலை என்பது அமர்நீதியின் நிகழ்ச்சியால் சின்னாபின்னப்படுத்தப்பட்டுவிட்டது. எப்படியென்றால், அமர்நீதி, தம்மிடம் வந்த பிரமசாரி, ஒரு பாப்பனன் என்பதை அறிந்தவுடனே அவரை நோக்கி, " இங்கே பார்ப்பனர்கள் உணவு கொள்வதற்காகப்பார்ப்பனர்களைக் கொண்டேசமைக்கப் பெற்ற உணவும் உண்டு" என்றுகூறியதாகச் சேக்கிழார் என்ற 'தமிழ்ப்பெரியார்' சாற்றியுள்ளார். அதாவது,

இத்திரு மடத்தே, நன்று நான்
மறைநற்றவர் அமுது செய்தரு
ளத், துன்று வேதியர் தூய்மை
யின்அமைப்பதும் உளதால் "

என்று கூறியுள்ளார். சேக்கிழாரின்

இக்கூற்றுத், தமிழ்மக்களின் உயர்ந்த பண்பை எத்துணை அளவு கீழ்நிலைக்குக் கொண்டு போய்த் தள்ளி விட்டுவிட்டது பாருங்கள்! தமிழ் மக்கள் எவ்வளவு உயர்ந்த நிலையை உடையவர்களாய் இருந்தாலும், பார்ப்பனர்கள் அவர்களால் சமைக்கப் பெற்ற உணவை உண்ணுதல் கூடாதென்பதையே இந்நிகழ்ச்சி வலியுறுத்தி நிற்கின்றது. சேக்கிழாருக்குத் தமிழர் பண்பு தெரிந்தோ அல்லது தமிழர் பண்பை மதிக்கும் மாண்போ இருந்திருக்குமானால், ஒருபோதும் இப்படிப் பாடியிருக்கவே மாட்டார். ஒருவேளை, அமர்நீதி, பார்ப்பனருக்கு வேறு சமையல், பார்ப்பனரல்லாதாருக்கு வேறு சமையல், என்று பிரித்து வைத்திருந்தார் என்று வைத்துக் கொண்டாலும், தமிழ் மக்களின் உயர்ந்த பண்பை உலகுக்கு உரைக்க வந்த சேக்கிழார் அதனை எப்படிக் கூறியிருக்கவேண்டும்! "அமர்நீதி நாயனார் வரலாற்றில், அவர், பார்ப்பனருக்கு வேறு சமையலும் அல்லாதாருக்கு வேறு சமையலுமாகப் பிரித்துவைத்திருந்தார் என்பதாகச் சொல்லப்படுகிறது. இது 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற தமிழ்ச் சான்றோர் நன்மொழிக்கும், தமிழர் தம் உயர்ந்த பண்புக்கும் மாறுபட்டதொன்றாகும்; என்றபோதிலும், நான் பழைய வரலாற்றை அடிப்படையாக வைத்து அதன்படியே பெரியபுராணத்தைப் பாடுகின்றேனாதலால், இதனை நான் புகுத்தியதாகக் கருதி எவரும் என்னைச் சாடுதல் கூடாது" என்று அந்த வரலாற்றிலேயே மேலும் இரண்டொரு பாடலால் விளக்கியிருக்கலாம். எத்தனையோ நம்பத்தகாத—ஒப்புக்கொள்ள முடியாத — இழிவான—ஒழுக்கத்தைப் பாழாக்கும் நிகழ்ச்சிகளைப் பெரியபுராணத்துள் வலிந்து புகுத்தும் ஆற்றல் (தைரியம்) கொண்ட சேக்கிழாருக்கு, உலகம் ஒப்புக்கொள்ளக்கூடிய உண்மையை எடுத்துக் காட்டி, அது குறித்த ஒரு சிறு விளக்கமாவது தரமுடியாமலா போயிற்று? ஆனால், சேக்கிழார் இங்ஙனம் பாடியது, "நான் பெரிய புராணம் பாடியது, உண்மையாகவே பார்ப்பனருக்கு உயர்வு கொடுக்கவும், தமிழ்மக்களை இழிவு படுத்தவுமே" என்பதையேஎடுத்துக் காட்டுகின்றது.

இனி, அமர்நீதியின் அன்பைச் சோதிப்பதற்காகவே சிவன் அந்த வடிவம் தாங்கி வந்தார் என்றுசொல்லப்படுகிறது. எல்லாம் வல்ல—எல்லாம் அறிந்தவராகப் பறைசாற்றப்படும் சிவனுக்கு, அமர்நீதியின் அன்பு இப்படிப்பட்டது என்று தெரியாமல் பள்ளிக்கூட ஆசிரியர், தான், மாணவர்களுக்குக் கற்றுக்கொடுத்தபாடங்களை யெல்லாம் சரியாகப்படித்திருக்கிறார்களா என்று சோதித்துப்பார்த்துப் பரிசு வழங்குவதுபோல், சிவனும், "அமர்நீதி என்னிடத்தில் கொண்டுள்ள அன்பு எத்தகையது என்பதைச் சோதித்துப் பார்த்தே அவரை என்னோடு அழைத்துக் கொண்டு போய்க்கைலைவாழ்வு வழங்க வேண்டும்" என்று எண்ணி அவரைச் சோதிக்க வந்தார் என்றால், அது, அவருடைய கடவுட் பண்பையே இழிவு படுத்துவதாகும். எல்லாவற்றையும் ஓரிடத்தில்இருந்தபடியே அறிந்து அததற்கேற்பஅருள் வழங்கும் ஆற்றல் பெற்றவராகப் பேசப்படும் சிவன், ஒருவருடைய அன்பைச் சோதிப்பதற்காகத் தம்முடைய இருக்கையை விட்டுப் பெயர்வதும், அச்சோதனைக்காக ஒரு தனிவடிவம் கொள்வதும் உண்மையிலேயே அவருடைய அளப்பரும் ஆற்றலை அழித்தொழிக்கும் அடாத செயல் என்று அவனருளை நாடும் அன்பர்கள்கூட எண்ணி அயர்வர்.

இனி, ஒருவேளை, அமர்நீதியின் அன்பு இப்படிப்பட்டதென்பது உலகினர்க்குத் தெரியாது; எனவே, சிவன் கைலையை விட்டுக் கிளப்பி வந்து அவருடைய அன்பைச் சோதித்த பின்னரே, அவர்கள், அவருடைய அன்பின் திறத்தை, அறிய முடிந்தது—அறிய முடியும் என்று கொள்வதும் கூடாதே! அமர்நீதியாரிடமிருந்து பெற்ற அன்னத்தை உண்டவர்களும், பெற்ற ஆடையை அணிந்தவர்களும் அவருடைய நிறைந்த அன்பின் திறத்தை நன்கு அறிந்திருப்பார்கள்—அவரை வாழ்த்திப் போற்றியிருப்பார்கள்-போற்றுவார்கள். எனவே உலகமுழுவதிலுமுள்ள எல்லாப் பொறுப்புகளையும் தம் தலைமீது போட்டுக்கொண்டுள்ள சிவன், இந்தத் தேவையற்ற—சிறிய—விரும்பத்தகாத—நாகரிகமற்ற — நாணயமற்ற காரியத்தைச் செய்வதற்காகத் தம்முடைய வடிவத்தை மாற்றிக் கொள்வதும், அவ்வடிவத்திற்கேற்ப வேண்டப்படும் தருப்பை, பூணூல், மான்தோல், விபூதிப்பை, தண்டு ஆகிய பொருள்களைத் தேடிப் பெற்றுக்கொள்வதும், அதற்காகக் கைலையை விட்டுக் காடு—மலை எல்லாம் கடந்து கால் கடுக்க நடந்து வருவதும் வேண்டப்படாத—விரும்பத்தகாத — கடவுள் தன்மைக்கே ஒவ்வாத செயல்களே என்று என்னுடன் நெருங்கிப் பழகும் சிவ அன்பர் ஒருவர் கூறுகின்றார். அதோடு அவர் நிற்கவில்லை. அமர்நீதியின் அன்பைச் சோதிக்க வந்த எங்கள் சிவப் பெருந்தகை, கேவலம் ஒரு கோவணத்திற்காக, உள்ளும் புறமும் ஒத்த அன்புநெறியில் நின்ற அமர்நீதியை அவமானப் படுத்தியதை எண்ணும்போது, அமர்நீதியாருக்கே அத்தகைய கடுமையான சோதனை ஏற்பட்டதென்றால், அவருடைய அடிச்சுவட்டின் தூசுக்குக்கூட ஒப்புவமை பேசமுடியாத என் போன்ற சிவ அன்பர்களுக்கு எத்தகைய சோதனைகள் ஏற்படுமோ என்றும் அஞ்சுகிறேன்என்றுஎன்னிடம் கூறி ஆயாசப்பட்டார். அவ்வளவோடும் அவர் நிற்கவில்லை. எம்முடைய சிவனாரின் படைப்பில் ஒருவரும், சிவனாரின் ஆணையை எதிர்நோக்கி நிற்பவருமான திருமாலுக்கு நிகழ்ந்த "கிருஷ்ண துலாபாரம்" போல, உலக முதல்வனான எங்கள்சிவனுக்கும் "கோவண துலாபாரம்" என்றொரு இழிவையும் பெரிய புராணம் உண்டாக்கிவிட்டதே! என்று மேலும் அவர் கூறிக் கவலைக்கடலில் ஆழ்ந்துவிட்டார்.

கிருஷ்ண துலாபாரம் போன்றதன்று சிவனுடைய கோவண துலாபாரம். கிருஷ்ணன் துலாத் தட்டில் ஏறியதுபோல் சிவன் ஏறவில்லை. அவருடைய கோவணம் மட்டுமே தராசுத் தட்டில் இடப்பட்டது. சிவனுடைய கோவணம் ஒன்றுக்கே, அமர்நீதி, அவரது மனைவி, புதல்வன், இன்னும்அவரிடமிருந்தஆடைகள் (பொதிக் கணக்கில்) பொன் வெள்ளி முதலிய உலோகங்கள் (இவையும் பொதிக்கணக்கில்) வேறு அவரிடமிருந்த பொருள்கள் எல்லாவற்றையும் தட்டில் இட்டபின்னரே, நிறை ஒத்து வந்ததென்றால், சிவனுடைய பிற பொருள்களான கங்கை-நிலா—பாம்பு—சடாமுடி—உருத்திராக்கம்-எலும்பு மாலை-மண்டையோடு—மான்—மழு—சூலம்—உடுக்கை-புலித்தோல் —மான்தோல், யானைத்தோல் — குண்டலம்-பாதக்குறடு-இன்னும்எண்ணத்தொலையாத.

(2-ம் பக்கம் பார்க்க)

# ★ அசுவ ரட்சகன்! ★

—✲—

"சார்! ஒரு நூறு ரூபாய் கடன் கொடுங்க, அடுத்த மாதச் சம்பளத்திலே—தவறாமல் கொடுத்து விடறேன்."

"ஏதுங்க பணம்? ரொம்ப மொடையா இருக்கு. வெளியே கொடுத்த பணம் திரும்ப வர்ரதில்லே."

"அப்படிச் சொல்லாதிங்க, சார்! நம்ம நாணயத்தைப் பாருங்கோ இந்தத் தடவை. வட்டியைப் பத்தி கவலைப்படாதிங்க. பெரிய மனசு வையுங்க!"

"என் கையிலே பணமில்லே. எங்காவது வாங்கித்தான் கொடுக்க வேண்டும். அயோக்கியனுங்க, பணப்பேயுங்க—கொஞ்சம் கூடுதலா வட்டி கேப்பானுங்க. உங்களுக்கு அவசரமா வேணும்னு, அவங்க கேக்கிற வட்டியைக் கொடுத்துத்தான் வாங்கித் தரணுங்க."

"சரிங்க! எப்படியாவது செய்யுங்க. எப்படியாவது என் மனேவி உயிர் காப்பாத்தப்பட்டாபோதுங்க. பணம் நாம் பார்த்துச் சம்பாதிக்கிறதுங்க. வாண்ணு வரும் போண்ணு போகும்! உயிர் வருங்களா?"

"வட்டி தெரியுங்களா? ரூபாய்க்கு இரண்டணுவுங்க! சம்மதமா சொல்லுங்க சீக்கிரம். முதலிலேயே வட்டியைப்பிடிச்சிகிட்டுத்தான்மிச்சத்தைக் கொடுப்பாங்க!"

"அதுதான், தெரிஞ்ச சங்கதி ஆச்சிங்களே! அவங்க வட்டி அதிகம் கேக்கிறுங்களேன்னு நாம் வருத்தப் படக்கூடாதுங்க. கடவுள் போல் ஆபத்திலே உதவறதைப் பாக்கணுங்க!"

"இது என்னுங்க ரூபாய் இரு நூறுக்கு பாண்டு எழுதி இருக்குங்களே?"

"ஏங்க! இந்த இடத்துக்குப் புதிசு போல இருக்கு? இங்கு எல்லாம் அப்படித்தானுங்க. பொன் நகையை அடமானம் வைச்சாலே பணம் கொடுக்கிறவங்க கிடையாது. கையெழுத்தை நம்பி யாருங்க பணம் கொடுப்பாங்க?"

"அதுக்குங்களா? அப்ப நான் கடனைப் பைசல் செய்கிறபோது நூறு ரூபா தானுங்களே கொடுக்கணும்."

"ஆமா ஆமா! இப்படி எழுதினுல் தான் உங்களுக்குப்பயம் இருக்கும். குறித்த காலத்தில் பணத்தைத்திருப்பிக் கொடுத்து விடுவிங்க; அதுக்காகத்தாங்க இப்படி எழுதறது!"

* * *

"ஏன் பிரதர் போவமா? கொஞ்சம் முன்னுடியே போவணும் பிரதர். போனவாரம் போல இந்த வாரமும் நாம் ஏமாந்துவிடக் கூடாது. ஜெயிக்கிற குதிரையாப் பாத்துப் பணம் கட்டணும் பிரதர்."

"நாம் முன்னுடியே போறது இருக்கட்டும் பிரதர்; நான் சொன்னேனே, அந்த ஜோசியனேப்பார்த்துக் கேட்டையா?"

"எல்லாம் கேட்டுட்டேன் பிரதர். அதுமட்டுமா? எங்க வீட்டுப்பிள்ளை யாரும் பூ கொடுத்திருக்கு பிரதர். இந்தத் தடவை ஜெயம் நமக்குத்தான் பிரதர்!"

"போடா முட்டாளே! உன்கூடச் சேர்ந்து வந்தேனே. உன் பேச்சைக் கேட்டுக்கெட்டேன். இனி உன் சவகாசமே வேண்டாம்பா!"

"நான் என்னடா பண்ணுவேன்? கடைசி வரைக்கும் அந்தக் குதிரை தான் முன்னுலே வந்தது? கண் மூடித் திறக்கிறதுக்குள்ளே அந்தக் குதிரை பின்னடைஞ்சிடுமுண்ணு யாருடா கண்டாங்க?"

"இனி உன் சவகாசமே வேண்டாம். கொள்ளைக்குப் போனுலும் கூட்டு உதவாதடா?"

"ஏன்சார்? மாதம் இரண்டாவுது சார்! ஒரு மாதத்திலேயே தருவதாச் சொன்னிங்க, மாசம் இரண்டாகியும் பணம் வந்த பாட்டைக் காணங்க. பணத்துக்கு ரொம்ப அவசரங்க. இன்னும் ஒருவாரத்திலே கொடுத்துடுங்க. இல்லையானு, பின்னுலே நிஷ்டூரப் படாதிங்க."

"என்னய்யா குடிமுழுகிப் போயிடும்? மாதம்இரண்டானு என்னய்யா நஷ்டம் வந்துடும்? வட்டிதானேய்யா உனக்கு? வாங்கிக்கோய்யா; வீண் பேச்சுப் பேசாதேய்யா?"

"பணம் வேணும்னு, என்னிடத்தில் கெஞ்சினமாதிரி காணுமே. பேச்செல்லாம் மிடுக்கா இருக்கு! ஏன் இருக்காது? உன் குடுமி என் கையில் இருக்கும்போதே இவ்வளவு திமிராப் பேசறே நீ!"

"திமிர் கிமிருண்ணு சொல்லாதேய்யா! எப்படிவாங்கிக்கோணுமோ, அப்படி வாங்கிக்க போய்யா!"

"மானம் பொவுதுங்க! நான் போட்டிருந்த சகலமும் ஒண்ணு பின்னுலே ஒண்ணு பள்ளிக்கூடம் போயிடுத்து. இப்ப இருக்கிறது இந்தத் தாலிசரடுதான். இதையும் தொலேச்சுகிட்டுப் போங்க. இதைக் கொண்டுபோய்வித்துட்டு, பணத்தை அமிஞவிடம் கொடுத்து முதல்லே அனுப்பிச்சுட்டு மறுவேலெ பாருங்க. நம்ம மானம் போறதுக்கு முன்னே, உங்கவேலையுமல்லவோ, போய்த் தொலேயும்! பிறகு கிண்ணிப்பிச்சை எடுக்கவேண்டியது தான்?"

"இது என்ன அக்கிரமம்? இப்படி வாங்கிய பணத்தை எல்லாம், விளேயாடிட்டு வந்துட்டா, வீட்டுச் செலவுக்கு என்னு செய்யறதாம்?"

"போடிண்ணு போ! வாயை மூடிகிட்டுபோ! கொழந்த குட்டிகளே காப்பாத்திட்டா போதுண்டி! என்னமோ வாய் செத்ததுங்க, அந்தக் குதிரை, அதுங்களே யாருடி காப்பத்தறது? நம்ம நாட்டுக்குதிரைங்க, உலகத்திலேஉள்ள குதிரைங்களோடு போட்டி போடணுண்டி, முட்டாளே அப்பதாண்டி, நம்ம நாட்டை உலகத்தார் மதிப்பாங்க! அதுதாண்டி நம்ம நாட்டுக்குக் கவுரவம்!"

"நான் என்னு கேக்கிறேன், நீ என்னு உளர்ரே?"

"நான் உளறவுமில்லே குளறவுமில்லே! உண்மையத்தாண்டி சொல்லறேன்! நம்மைப்போலஇரண்டொரு குடும்பம் கெட்டுவிட்டா, நாட்டுக்கு ஒண்ணும்நஷ்டம்வந்துடாது. ஆனல் நம்மநாட்டுக்குதிரைங்க, மற்றநாட்டுக்

(5ம் பக்கம் பார்க்க)

Edited Printed Published by C. N. Annadurai, M. A., at "Dravida Nadu" Press,
317—319 Hodgsonpet Conjeeveram.